# விடுதலைப்புலிகள்

குரல்: 67 | 16 - 31 வைகாசி 1996 | அன்பளிப்பு: 5/=



**உள்ளே**

- ஆக்கிரமிப்புக் கோட்பாடு ஒரு பலிக்காத தந்திரம்
- வன்னிப் படையெடுப்பு : நடைபெறப் போவதென்ன ?
- எப்படிப் பட்டவர்கள் எம் மக்கள்?
- சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவின் போக்கு
- அவலத்தைத் தந்தவருக்கே அதைத் திருப்பிக் கொடு
- சுதந்திர தேவியை தொழுதிடல் மறக்கிலோம்.


### பேரழிவு மிக்க யுத்த நெருக்கடிக்குள் சிங்களம் சிக்கப்போகிறது!

# பெரும் கெரில்லாப்போர் அரங்காக

# குடாநாட்டை மாற்றப் புலிகள் திட்டம்!

### நுட்பமான தந்திரோபாயங்களோடு களத்தில் அதிரடி அணிகள்

**பெ**ருமெடுப்பில் படைகள் நகர்த்தப்பட்ட மரபு வழிச் சமரின் வாயிலாகக் குடாநாட்டைக் கைப்பற்றுவதில் சிங்களப் படை தற்காலிக வெற்றியைப் பெற்றிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து சந்திரிகா - ரத்வத்த அரசானது, யாழ்ப்பாணத்தின் பொது நிர்வாகத்தைப் படைத்துறையின் கைகளில் ஒப்படைத்திருக்கிறது

ஆனால் இவ்வேளையில் -

குடாநாட்டில் சிங்களப் படையை முறியடிப்பதன் மூலம், தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான சிங்களத்தின் பேரினவாதப்போரையே வென்றிடும் மூலோபாயத்தை புலிகள் செயற்படுத்தவுள்ளனர்.

அதற்கான போர்முறைத் திட்டத்தைப் புலிகள் வரைந்துவிட்டனர்.

எதிரிக்குப் பேரழிவுகளைக் கொடுக்கும் வகையில் அதிரடித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்திக் - கெரில்லாப் போரைக் குடாநாட்டில் விரிவுபடுத்திச் சிங்களப் படையின் போரிடும் வல்லமையை உடைத்தெறியும் தந்திரோபாயத் திட்டங்களோடு புலிகளின் போரணிகள் தயாராகிவிட்டன.

*யாழ்ப்பாணக் குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான தொடர் நடவடிக்கைப் போர்த்திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்த சிங்கள அரசாங்கம், 'சூரியப் பிரகாசம்' படையெடுப்புகளை நடாத்தி முடித்து விட்டது.*

*நீண்ட பெரும் மரபுவழிச் சமரில் ஈடுபடக் கூடிய வளங்கள் பற்றாக்குறையான நிலையில் குடாநாட்டைத் தற்காலிகமாக விட்டுக் கொடுக்க வேண்டியது புலிகளுக்குத் தவிர்க்க முடியாததாகிப் போனது.*

*மிகப்பெரிய ஆட்பல, மற்றும் படைபல வளங்களுடன் நடவடிக்கையை ஆரம்பித்த எதிரிப் படைகளை உடனடியாகத் தடுத்துநிறுத்துவதென்பது, வளர்ச்சியடைந்து வரும் - மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளையே கொண்ட - புலிகள் போன்ற ஒரு விடுதலை இயக்கத்திற்கு நடைமுறைச் சாத்திய மற்ற ஒரு காரியம்தான்.*


*அத்தகைய ஒரு அமைப்புக்கு, மரபுவழி நேரடிச் சமரின் பொருதுகளம் சாதகத் தன்மைகளைக் கொண்டதாக அமையாது என்பதால் -*

*அது நிலங்களை விட்டு விலகி தற்காலிகமாகப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பது ஒரு உலகறிந்த இராணுவ உண்மை.* →

*தேசியத்தின்*
*வேட்கையைச் சுமந்து*
*புறப்படுகிறது புயல்!*
*கண்ணீரின் சரித்திரம்*
*முடிந்து விட்டது!*
*இனி வேறு கதை;*
*இது புதிய கதை!*
*எம் துப்பாக்கிகளின்*
*சுடு குழல்களே*
*இனி வரலாற்றை எழுதும்!*
*கரிமருந்துப் புகைகலந்த*
*சுவாச மூச்சிலிருந்து பிறக்கும்*
*எம் பூகம்பம் -*
*வாளேந்திய சிங்கத்தின்*
*ஆளுகையை முறிக்கும்.*

*அடக்கு முறையாளரின்*
*முகடுகளை உடைத்துக் கொண்டு -*
*சுதந்திரத்தின் சிகரத்தில்*
*இனி நாங்கள் முடிசூட்டுவோம்!*
*காலத்தின் கர்ச்சனையாய்*
*செவிகளை*
*எம் தேசியகீதம் நிறைக்கையில்*
*'தமிழீழம்' -*
*உலகத்தின் நெற்றியில்*
*பொறிக்கப்படும் அந்த திருப்பெயர்.*

தி. இனியவன்




## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

# பலிக்காத தந்திரம்

தமது ஆக்கிரமிப்பிற்குள் வாழும் மக்களது மனங்களை வென்றெடுக்கும் வகையில் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்வது, என்பது நவகாலனித்துவத்தின் ஒரு தந்திரோபாயமாகும்.

மக்களது எதிர்ப்புணர்ச்சியைத் தணிப்பதற்காக, ஆக்கிரமிப்பு அரசுகள் இவ்விதமான நடவடிக்கைகளில் ஈடுபட முனைவதை, வரலாற்றின் அநேக இடங்களில் காணமுடியும்.

தனது ஆளுகைக்குள் இருந்த வியட்னாமிய மக்களது 'மனங்களை வென்றெடுப்பதற்காக', பெருந்தொகைப் பணச் செலவில் 'சாந்தப்படுத்தும்' திட்டங்களை அமெரிக்க அரசு நடைமுறைப்படுத்திப் பார்த்தது. இந்திய அரசும் இவ்விதமான சில திட்டங்களைத் தமிழீழத்தில்–நடாத்திப் பார்த்தது. எனினும், ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு இந்தத் தந்திரோபாயம் வெற்றிகளைத் தேடிக் கொடுக்கவில்லை:

ஆக்கிரமிப்பு, அரசுகளது அல்லது படைகளது அடக்குமுறைகளைச் சிற்சில சலுகைகளுக்காகக் குறித்தமக்கள், மன்னித்து மறந்துவிடுவார்கள் என்ற பிழையான கணிப்பின் விளைவே, மக்களைச் சாந்தப்படுத்தும் இத்தகைய திட்டங்கள் தொடர்பான சிந்தனைகள் ஆகும்.

ஆக்கிரமிப்பாளர்கள் எதைத்தான் செய்தாலும், ஆக்கிரமிப்பை நியாயப் படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் என்றே அவற்றை மக்கள் நோக்குவர். ஆக்கிரமிப்பு இராணுவம் தமது மண்ணில் நிலைகொண்டு இருக்கும்வரை, தாம் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் என்ற எண்ணத்துடனேயே மக்கள் வாழ்க்கையை ஓட்டுவர். இதன் காரணமாக, ஆக்கிரமிப்பு அரசுகள் நடைமுறைப்படுத்தும் எந்த ஒரு திட்டமும், நீண்டகால நோக்கில் வெற்றி பெறச் சந்தர்ப்பமே இல்லை. அதுவும் ஆககிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பு இயக்கமொன்று வலுவான நிலையில் செயற்படுமாயின், அத்தகைய கபடநாடகங்கள் வெற்றி பெறுவதற்கு மக்கள் அனுமதிக்கவே மாட்டார்கள்.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியுள்ள சிங்களப் படைகளும், உழுத்துப் போன இந்த நவகாலனித்துவ தந்திரோபாயத்தையே அங்கே நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுககின்றன.

விடுதலைப் போராட்டம் பிறந்து வளர்ந்த வரலாற்றுச் சூழலைப் புறந்தள்ளிவிட்டு, சிற்சில சலுகைகளை, வாழ்க்கை வசதிகளைக் குடாநாட்டு மக்களுக்குச் செய்துகொடுத்தால், அவர்கள் போராட்ட உணர்வைக் கைவிட்டுவிடுவார்கள் என்ற முட்டாள்தனமான சிந்தனைதான் 'சூரியப் பிரகாச'த்தின் அரசியல்இலக்காகவும் உள்ளது.

இதேவேளை, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடாநாட்டிற்குள் புலிகள் கெரில்லாத் தாக்குதல்களை இப்போது தீவிரப்படுத்தி உள்ளனர்.

உறுதியான ஒரு பின்தளத்திலிருந்து நடாத்தப்படும் கெரில்லாத் தாக்குதல்களை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பது உலகின் அரசியல் இராணுவ மேதைகளே ஒப்புக்கொண்ட ஒரு உண்மையாகும்.

பிரமாண்டமானதும், சிங்களப்படைகளால் வெற்றிகொள்ளப்பட முடியாததுமான வன்னிப் பெருநிலப்பரப்பைப் "பின்தளமாகக்கொண்டு, புலிகள், இந்தக் கெரில்லாத் தாக்குதல்களை நெறிப்படுத்தி நடாத்துகின்றனர். குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சிங்கள அரசின் இன்றைய முயற்சிகள் சீர்குலைந்து சின்னாபின்னமாகும் அளவுக்கு, அங்கே தாக்குதல்கள் விஸ்தரிககப்படப்போகின்றன. இது காலப் போக்கில் தீவிரமடைந்து 'எரிமலை மீது குந்தியிருக்கும்' ஒரு உணர்வைக் குடாநாட்டுப் படைகளுக்கு கொடுக்கும்.

'தாம் மீட்டெடுத்ததாகத், தம்பட்டம் அடித்துக்கொள்ளும் மக்களே, தமது பிரதான எதிரிகள்' என்று முடிவெடுக்கும் அளவுக்குக், குடாநாட்டுப் படையினர் நெருக்கடிகளைச் சந்திக்கப் போகின்றனர். இதுகாரணமாக'சூரியப்பிரகாச'த்தின் அரசியல் இலக்கு சிதறுண்டு போகப் போகின்றது.

'சூரியப்பிரகசம்' நடவடிக்கைகள் மூலம்–சிங்களஇனத்திற்கு ஒரு வரலாற்று வெற்றியைப், படையினர் ஈட்டிக்கொடுத்துள்ளனர் எனப் பேரினவாதிகள் இன்று மகிழக்கூடும். ஆனால், சந்திரிகா அரசு இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறுதான் சூரியப்பிரகாசம் நடவடிக்கைகள் என்றுவரலாற்று ஆசிரியர்கள் கூறும் அளவுக்கு நிலமைகள் சிக்கலடையப் போகின்றன என்பது நாளைய உண்மையாகும். O

# மாபெரும் கெரில்லாப் போர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டுப் படையெடுப்பு நடந்து முடிந்துவிட்ட நிலையில், இப்போது, வன்னிப் பெருநிலம் மீதான படையெடுப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்மாவட்டத்தில் தமது நிலைகளைப் பலப்படுத்திய பின்பு மிக விரைவிலேயே – வன்னிப் படையெடுப்பிற்கான முயற்சியைச் சிங்களப்படைகள் மேற்கொள்ளலாம் என ஊகிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட குடாநாட்டில் நிறுத்துவதற்கெனப் புதிதாகப் 15,000 பேர் படையில் துரிதமாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். எனவும் -

குடாநாட்டில் நிர்வாக இயந்திரத்தை இயக்குவதற்காக முன்னாள் படைத்தளபதிகள் மீண்டும் சேவைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர் எனவும் –

இம்மாதம் 29ஆம் திகதி நடந்த செய்தியாளர் சந்திப்பில் லெப். ஜெனரல் றொகான் தளுவத்த அறிவித்தலிருந்தே, வனனிப் படையெடுப்புக்குச் சிங்களப் படைகள் தயாராகி வருகின்றன என்பதை ஊகித்து அறிய முடிகின்றது.

குடாநாட்டிற்குள் தற்போது பரவலாகநிலைகொண்டிருக்கும் தனது முன்னணித் தாக்குதற் படைப்பிரிவுகளை அங்கிருந்து விலக்கி எடுத்து வன்னிச்சமரில் ஈடுபடுத்துவதற்காகவே –

அதற்கு மாற்றீடாகப், பழைய தளபதிகளையும்,புதிய சிப்பாய்களையும் திரட்டிக் குடாநாட்டிற்குள் நிறுத்தும் திட்டத்தை அரசு துரிதமாகநடைமுறைப்படுத்த முயல்கின்றது.

விடுதலைப் போராட்டத்தின் செயற்பாட்டு மையமாகவும், புலிகள் இயக்கத்தின் பினனணித் தளப்பிரதேசமாகவும் வன்னிப் பிராந்தியமே இப்போது விளங்குவதால் -

புலிகளையும், அதன் மூலம் போராட்டத்தையும் செயலிழக்கச் செய்யும் நோக்கத்தை அடைவதற்காக வன்னிப் படையெடுப்பை நிகழ்த்தி யுத்தத்தைப் புலிகளின் வாசற் படிகளுக்குக் கொண்டு செல்லச் சிங்களத் தளபதிகள் தயார்படுகின்ற வேளையில் –

குடாநாட்டிற்குள் கெரில்லாப்போர் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, சிங்களப் படையினரின் நடுக்கூடங்களுக்கு உள்ளேயே பெரும் யுத்தகளங்களை உருவாக்கும் தந்திரோபாயத் திட்டங்களுடன் புலிகளின் போரணிகள் தயாராகி விட்டன.

எதிரி அகலக் கால் வைத்துப் பரவியுள்ள இராணுவச் சாதக நிலையைத் திறம்படப் பயன்படுத்தி, அதிரடித் தாக்குதல்களைத் தீவிரமாக்கி – எதிரிக்குப் பேரழிவைக் கொடுத்து – அவனது உயிரிழப்பு எண்ணிக்கையை ஆச்சரியப் படத்தக்க வகையில் அதிகரிக்கச் செய்து, தமிழர்களுக்கு எதிரான போரின் அடுத்தகட்டம் பற்றிச் சிந்திக்கவே முடியாத நீண்டபோர் நெருக்கடிக்குள் சிக்கவைத்துச் சிங்களப்படையைப் புலிகள் திணரடிப்பர்.

குடாநாட்டு மக்களின் பேராதரவுடன் – உற்ற துணையுடன் யாழ்ப்பாணக் களத்தில் புலிகள்–அறிமுகப்படுத்தவுள்ள புதிய போர்முறைத் திட்டத்தின் நடைமுறை விளைவாக – குடாநாட்டின் ஆளுகை அதிகாரத்தைப் படைகளிடம் ஒப்படைத்து - சந்திரிகா அரசாங்கம் அங்கு நிறுவத் திட்டமிட்டுள்ள இராணுவ நிர்வாகக் கட்டமைப்பை அடியோடு சீர்குலைத்துவிட முடியும் என்பது மட்டுமன்றி –

குடாநாட்டில் சிங்களப் படையின் உறுதியான நிலைப்படுத்தலைத் தடுத்து நிறுத்துவதனூடாகப், போராடடத்தின் பின்னணித் தளப்பிராந்தியமான வன்னியையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பின்னணித்தளப்பிராந்தியமாகப் பாதுகாக்கப்படும் வன்னிப் பிரதேசத்தில் உறுதியாகக் காலூன்றி நின்று, சிங்கள அரசாங்கத்தை முழுமையாகவே நிலைகுலையச் செய்வதற்கான நாடு தழுவிய போராட்டத்தை அங்கிருந்தே நெறிப்படுத்துவதுடன் –

சிங்கள தேசத்துப் படைபலத்தின் பெரும்பான்மை குவிக்கப்பட்டுள்ள குடாநாட்டுக்குள்ளேயே சிங்களப்படைகளை -பேரழிவைக்கொடுத்து– முறியடிப்பதன் மூலமாக, தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான சிங்களப் பேரினவாததின் போரிடும் வல்லமையையும் புலிகள் நிரந்தரமாகவே உடைத்தெறிவர்.

தமிழினத்தின் சுபீட்சத்துக்கான ஆயுதப் புரட்சியானது, இன்றைய வரலாற்றுக் காலகட்டத்திலிருந்து, புதிய தந்திரோபாயங்களுடு – புதிய வழிமுறைகளுடன் – இனிப்புதிய பரிமாணங்களில் விரியும். O

# வெள்ளைக் கொடி கட்டிய வீட்டிலிருப்பது விடுதலை அல்ல...

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே."

பாரதி!
சுதந்திர தேவியின் பாதங்களை வருடி
ஆயிரம் வரிகளால் அர்ச்சித்த பாவலனே!
எட்டயபுரத்து அரசே!
எங்களுக்காகவா எழுதினாய் இப்பாட்டு?
கைதொழத் தக்க கவிஞனே!
காலம் கடந்தாலும் நீளும் உன்குரல்
இன்றுமெம் காதில் ஒலிக்கிறது.
நெருப்பிற் புதைத்து பழுக்கக் காய்ச்சிய சொற்களால்
பொய்யில்லாப் பாடல் புனைந்தவனே!
விடுதலையை விருப்புறும் எவருக்கும்
உன்பாடல் உருவேற்றும்.
விடுதலை! விடுதலை! விடுதலை!!! என்று
உன் இதயக்குகையெங்கும் இருந்தது விடுதலை.
எம் தேசத்திசை யெங்கும் எழுவதும் விடுதலை.
விடுதலை என்பதின் விளக்க மென்ன?
சுதந்திரத்தின் சுருதிப் பொருள் யாது?
அனுபவித்தறியாததுக்கு உவமை கூறமுடியாது.
கற்பனையிற்தான் கொஞ்சம் கண்டு கொள்ளலாம்
விடுதலையை விரித்துரைக்க முடியா தெனினும்,
அது காற்றைப் போலவும் ஒரு உல்லாசம்;
கட்டளையற்றுப் பொழியும் மழை போன்ற சல்லாபம்;
சிட்டுக்குருவியின் சிறகசைப்பைப் போல ஆனந்தம்;
அதிகாலை இதழ்விரிக்கும் மல்லிகைப் பூவின் பரவசம்;
மலைதழுவும் கருமுகிலின் மகிழ்ச்சி;
இரு என்று சொல்லவும்
எழு என்று உத்தரவிடவும்
எஜமானர்களற்ற இருப்பு;
என்னை நானே தீர்மானிக்கும் வாழ்வு.
இதுவே விடுதலை.
அதற்காகவே போராட்டம்
அப்படியா?
கற்பனையிற்கூட எத்தனை ஆனந்தம்
கைவிலங்குகளற்ற கைதிகளாக வாழ்வதிலும்
மூச்சைத்துறந்து முடிந்துவிடுவது மேலானது.
எம் ஊரில்
எம் வீட்டில்
சுற்றம் சூழ இருப்பது மட்டும் சுதந்திரமல்ல
எம் வாழ்வை இன்னொருவன் தீர்மானிப்பது
விடுதலையுமல்ல.
பட்டிமாடுகளின் கழுத்தில் கயிறில்லை என்பதற்காக
மாடுகள் சுதந்திரமானவை என்று சொல்லமுடியுமா?
கூண்டுக்கிளியைக் கொஞ்சி மகிழ்வார்கள்.
பறந்து செல்லப் பார்த்திருப்பார்களா?
இன்னொருவனுக்குக் கீழே இருந்துகொண்டு
என்னைநானே தீர்மானிக்கிறேனென்பது
எவ்வளவு வேடிக்கையானது?
வீட்டுநாய் விறாந்தையில் ஏற முடியுமென்பதற்காக
நான் சுதந்திரமானவனென்று
நாயெப்படிக் கூற முடியும்?
இன்று
ஊருக்குப் போன உறவுகளெல்லாம்
'ஆனந்தசுதந்திரம்' அடைந்து விட்டோமென்று
பாட்டுக்கள் பாட பகைவன் விடுவானா?
சின்னத்திரையில் வண்ணப்படம் பார்ப்பதும்;
'சீமைச்சரக்கில்' வாய்நனைத்துக் கொள்வதும்;
பள்ளிக்குப் போவதும்;
பரீட்சை எடுப்பதும்;
வெள்ளைக் கொடி கட்டிய வீட்டில் இருப்பதும்
விடுதலையல்ல.
விளக்கேற்றாதே;
வீதிக்கு வராதே;
ஆறுமணிக்குள்ளே அடங்கிப்போ என்றதும்;
கூனிக்குறுகிக் கிடப்பதும் சுதந்திரமல்ல...
எம் வீட்டில்,
எம் ஊரில்,
தும்மவும், இருமவும் அனுமதிபெற வேண்டுமென்றால்
அந்த வாழ்வு யாருக்கு வேண்டும்?

எந்தையர் பூமியில் உலாவரும் உரிமம்கூட
எமக்கில்லை என்றான பின்பு
சும்மா மூச்சுவிடுவதற்குப் பெயர் சுதந்திரமென்றால்
சொன்னவன் மனிதல்ல...... சோற்றுப்பிண்டம்.
கைகட்டிச் சேவகம் செய்பவனுக்கு
காற்சட்டை வேண்டியதில்லை.
வெட்கமென்ன வெட்கம்?
நிர்வாணமாகவே நிற்கலாம்.
அடிமைவாழ்வில் அழுந்திக் கிடப்பவனுக்கு
தோலின் துவாரத்தில் வியர்வை கசிவதில்லை.
நாயாய் கிடப்பவனுக்கெதற்கு கோயிலும், குளமும்?
சுதந்திரமற்ற ஊரில் திருவிழா எதற்கு?
நான் நானாக இல்லை யென்றான பின்னர்
தேனென்ன? திரவியமென்ன?
உன்னுடலுக்கெதற்கு உணவென்று,
நாக்குக்கூட நகைத்துக் கொள்ளும்.
ஊரிருத்தல் உன்னதம் தான்.
ஆனால், அடிமையற்று இருத்தல் வேண்டும்.
ஏவல்செய்துகொண்டு இந்திரபுரியில் இருப்பதிலும்




- வியாசன்

சுதந்திரமாக வனாந்திரத்தில் வாழ்வது சுகமானது.
அச்சத்தோடு அரியணையில் இருத்தலிலும்
பயமேதுமின்றி தரையிலிருத்தல் தாழ்வன்று,
மீளா அடிமையென ஊரிருத்தலிலும்
கைவீசிக் கொண்டு காட்டிலிருத்தலே ஆனந்தம்.
வாய்பொத்திக் கொண்டு வலிகாமத்தில் வாழ்வதிலும்
வாய்திறந்து பாடி வன்னியிலிருத்தல் மேலானது.
ஊர்வந்த பகை தொலைத்தெம் பிள்ளைகள் வருவர்.
தலைவன் கொடியேற்றினானெனும் செய்தியும் வரும்.
"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே" என்று மகிழ்ந்து
பரந்தன் வீதியில் பாடிக்கொண்டும்
ஆனையிறவால் ஆடிக் கொண்டும்
நாமுமெம் ஊர்புகுவோம் ஓர்நாள்.
அன்று வலிகாமம் மட்டும் மீட்டதாய் இராது.
தேசம் முழுமையும் எம் வசமானதாய்
'தமிழீழம்' எல்லையிடப்பட்டு தனிநாடானதாய்
விடுதலையின் மெய்ப்பொருள் உணர்ந்ததாய் இருக்கும்.
உறுதிகுலையாது ஒருவனுள்ளான்
அவனெம் தலைவன்.
மானம் பெரிதென்ற மகுடம் அவன் தலையில்
ஈனம் துடைக்கின்ற இறுமாப்பு அவன் நெஞ்சில்.
வானம் இடிந்தாலும் வளையாத மனமுண்டு.
வரிவேங்கைப் படைவென்று வருமென்ற திடமுண்டு.
அடிமைத்தனத்தில் உழலும் உறவுக்கு
சுதந்திரதேவி!
உன் கண்ணின் ஒளி கொடு.
நிமிர்ந்தெழ நெஞ்சில் உரம்கொடு.
விடுதலை எம் மூச்சு.
விடுதலை எம் வாழ்வு.
அடிமை நரகில் அழுந்திக் கிடப்பதிலும்
விடுதலைக்காக எழுந்து வீழ்ந்துமடிந்தாலும்
அது பெருவாழ்வெனப் பெருமை கொள்வோம்.
ஒன்றே தேசம்!
ஒருவனே தலைவன்!
வென்றே வருவோம்!
விடுதலை பெறுவோம்!. O

# வன்னிப் படையெடுப்பு: நடைபெறப் போவது என்ன?

**வ**ன்னியில்
என்ன நடக்கப்போகின்றது?
என்பதுதான் வன்னிப்
பெருநிலப்பரப்பில் வாழும்
அனைத்து மக்களினதும்
இன்றைய வினாவாகும்.

வன்னிக்குள்ளும்
இராணுவம்புகுமா?

குடாநாட்டைப்போல
வன்னியையும்
இராணுவம் ஆக்கிரமிக்குமா?

அவ்விதம் நிகழ்ந்தால்
மக்களாகிய எங்களது
நிலைஎன்ன?

......என்பனபோன்ற
சில கேள்விகளுக்கு விடையறிய
மக்கள் ஆவலுடன்
இருக்கின்றனர்.

இந்த வினாக்களுக்கு
நேரடியாக 'ஆம்' அல்லது
'இல்லை' என்று பதிலளிப்பது
சரியான முறையாக அமையாது.

எனவே, வடதமிழீழத்தின்
புவியியல் அமைப்பு மற்றும்
போராட்டத்தின் பலம்,
எதிரியின் பலவீனமான அம்சங்கள்
என்பவற்றை
எடுத்து விளக்குவதன்மூலம் -
மக்களுக்குத் தெளிவான
கருத்துக்கள் போய்ச்சேர
உதவமுடியும்.

போர்நடைபெறும் நிலத்தினது
புவியியல் அமைப்பு
போரின் போக்கைத் தீர்மானிக்கும்
முக்கிய சக்தியாக இருக்கின்றது.
இந்தவகையில்,
வன்னியின் பூகோளநிலை
தமிழர்படைக்குச்
சாதகமானதாகவே உள்ளது.

வடதமிழீழத்தின்
நில அமைப்பு
இருவேறுயதார்த்தங்களைக்
கொண்டுள்ளது.

ஒன்று,
குடாநாடும் அதன்
புவியியல் அமைவிடமும்.
இரண்டு,
வன்னியும் அதன்
தரை அமைப்பும்.

குடாநாடு ஏறக்குறைய
ஒரு தீவைப்போன்றே உள்ளது.
இந்தத் தீவிற்குள்,
கடனீரேரி சில தீவுகளை
உருவாக்கி வைத்திருக்கின்றது.
குடாநாட்டின் இந்த தரை
அமைப்பு மரபுவழிப் போரைப்
பொறுத்தவகையில் -
ஒருபுறம், சாதகமான
அம்சங்களையும் மறுபுறம்,
பாதகமான அம்சங்களையும்
கொண்டு விளங்குகின்றது.

இத்தகைய
தரை அமைப்பைக்கொண்ட
புவியியல் பிரதேசத்தில்,
மரபுவழிப்போரில் ஈடுபடும்
படைகளின் வெற்றிக்கு
இரண்டு விடயங்கள்
மிகமிகப் பிரதானமாகத்
தேவைப்படுகின்றன.
ஒன்று, கடற்பலம்.
இரண்டு, படைக்கலசக்திப்பலம்
(Fire power)

இந்த இரண்டு விடயங்களிலும்
அல்லது,
இரண்டில் ஒன்றில் தன்னும்
ஒரு படை
பலவீனமாக இருக்குமானால்,
போரை வெல்வது என்பது
அதற்குக்
கடினமானதாக இருக்கும்.

குடாநாட்டுப்போரில்
தமிழர்படை சந்தித்த
இராணுவப் பின்னடைவை
இதன் அடிப்படையில்
விளங்கிக்கொள்ள முடியும்.

வன்னிப் பெருநிலப்பரப்பின்
நில யதார்த்தம்
அதன் உயிர்மையம் என்பது,
குடாநாட்டைப்போல,
ஒரு பகுதியில்
புதைந்து கிடக்கவில்லை.
வன்னியின்
ஒரு பகுதிக்குள் புகுந்து
போராட்டத்தின் உயிர்மையத்தை
விரட்டுவது, என்பது
சிங்களப்படையால் இயலாதது.
இது - வன்னிநிலப்பரப்பிற்கு
இருக்கின்ற
சாதகத்தன்மைகளில் ஒன்றாகும்.

''சூரியப்பிரகாசம்-1''
இராணுவ நடவடிக்கைக்கு
முன்னர் வன்னியில் (இராணுவக்
கட்டுப்பாடு அற்ற பகுதிகளில்)
ஏறக்குறைய
3 அல்லது 3½ இலட்சம் மக்கள்
வசித்துவந்தனர். குடாநாட்டுச்
சமரின் விளைவாக
3 இலட்சத்திற்கும்
மேற்பட்ட மக்கள்
வன்னி வந்து சேர்ந்தனர்.

*வன்னி, 8885 சதுரகிலோ மீற்றர் விஸ்தீரணத்தைக்கொண்ட ஒரு பாரிய - தொடரான நிலப்பரப்பாகும். சிங்களப் படையின் ''கைப்பற்றும் சக்திக்கு'' அப்பாற்பட்டதாக வன்னியின் நிலவிஸ்தீரணம் உள்ளது.*

குடாநாட்டைப்போல -
சிக்கலுக்குரியது அல்ல. வன்னி,
8885 ச. கி. மீற்றர்
விஸ்தீரணத்தைக் கொண்ட
ஒரு பாரிய -
தொடரான நிலப்பரப்பாகும்.
சிங்களப்படையின்
'கைப்பற்றும் சக்தி'க்கு
அப்பாற்பட்டதாக
வன்னியின் நிலவிஸ்தீரணம்
உள்ளது.

அத்துடன்,
குடாநாட்டில் இருந்ததைப்போல
ஆட்சி அலகுகள்
மற்றும், மக்கள் செறிவு
ஒரு குறித்தபகுதியில்
குவிந்திருக்கவில்லை.
அதுபோல, வன்னியின் நிலவளமும்
ஒரு குறித்த வட்டாரத்திற்குள்
ஒடுங்கிவிடவில்லை.

அதாவது,
வன்னியைப் பொறுத்தவகையில்,
இப்போது,
வன்னிப்பெரு நிலப்பரப்பில்
சுமார் 6 அல்லது 7 இலட்சம்
மக்கள் வசிக்கின்றனர்.
குடாநாட்டில், தற்போது,
4 அல்லது 5 இலட்சம் மக்களே
வசிக்கின்றனர்.
இந்தவகையில், சிங்களப்
படையின் ஆக்கிரமிப்பிற்குள்,
தற்போது குடாநாட்டில் உள்ள
மக்கள் தொகையைவிட
வன்னிப் பெருநிலப்பரப்பில்
அதிகளவு மக்கள் வசிக்கின்றனர்.
இது போராட்டத்திற்கு
வலுச்சேர்க்கும்
ஒரு புதியவிடயம் என்பது
கவனிக்கத்தக்கது.

போராட்டத்தின்
தற்போதய மையமாக
வன்னிப் பெருநிலப்பரப்புத்
திகழ்கின்றது.
வன்னியைத்
தளப்பிரதேசமாகக்கொண்டு
போராட்டத்தை முன்னெடுக்க
புலிகள் இயக்கம்
தீர்மானித்துள்ளது.
இதுவரை நாளும்
1035 சதுரகிலோ மீற்றரைக்
கொண்ட குடாநாட்டிற்குள்
நிலைகொண்டிருந்த
போராட்ட மையம்,
இப்போது 8885 சதுர கிலோ
மீற்றர்களைக் கொண்ட
வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு
இடம்மாறி உள்ளது.

குடாநாட்டில் இருந்த
போராட்ட மையத்தைத் தகர்க்க
தனது பலத்தை ஒருங்குதிரட்டிப்
பயன்படுத்தியது போல -
வன்னியில் செய்வது -
அரசுக்கு முடியாத ஒன்றாகும்.
என்னதான் முயன்றாலும்கூட
வன்னித்தளப் பிரதேசத்தைப்
புலிகள் இயக்கத்திடமிருந்து
அபகரிக்க
சிங்களப் படைகளால் இயலாது.

ஆயினும்,
வன்னிப் பெருநிலப்பரப்பு மீது
இராணுவ நடவடிக்கைகளை
அரசு செய்ய முயற்சிசெய்யும்
என்பதை எமது மக்கள்
நிச்சயம் எதிர்பார்க்கவேண்டும்.
அவ்விதம் செய்யும்படி
அரசை நிர்ப்பந்திக்க
பல்வேறு காரணிகள் உண்டு.


ஒன்று:
குடாநாட்டுப் படைக்கான ஒரு
விநியோகப் பாதையைத் திறக்க
வன்னியில் ஒரு பாரிய
இராணுவ நடவடிக்கையில்
இறங்கவேண்டிய அவசியம் உண்டு.

இரண்டு:
புலிகள் இயக்கத்தின்
இராணுவபலத்தைச்
சிதைப்பதற்காகவும்
வன்னியில் ஒரு படையெடுப்பை
நிகழ்த்த அரசு விரும்பும்.

மூன்று:
தனது நிருவாகத்தை
வன்னி மண்ணிலும்
→

**என்னதான் முயன்றாலும்கூட வன்னித்தளப் பிரதேசத்தைப் புலிகள் இயக்கத்திடம் இருந்து அபகரிக்கச், சிங்களப்படைகளால் முடியாது.**



**குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக அரசுப் படைகள் கிழக்கைக் கைவிட்டன. வன்னிப் பெருநிலப்பரப்பைக் கைப்பற்ற அவை எதைக் கைவிடப்போகின்றன.**

# மக்கள்களம்



கிழக்கை விடக்
குடாநாடு முக்கியம் என்று
சந்திரிகா - ரத்வத்த அரசு
உறுதியாக நம்பியதன் விளைவு,
கிழக்கைக் கைவிட்டு அது
குடாநாட்டைக் கையிலெடுத்தது.

அப்படியாயின்
குடாநாட்டைவிடப் பல்மடங்கு
நிலப்பரப்பைக் கொண்ட
வன்னிப்பெருநிலப்பரப்பைக்
கைப்பற்ற
அரசுப்படைகள்
எதைக் கைவிடப்போகின்றன
குடாநாட்டையா
கைவிடப்யோகின்றன...?

இதேவேளை,
குடாநாட்டிற்குள்
ஒரு நீண்ட - அத்துடன்,
அவர்களைச் சோர்வடையச்
செய்யப்போகின்ற
போரொன்றுக்குள்
சிங்களப்படைகள்
சிக்கிக்கொண்டுள்ளன. இதை
எவரும் மறுதலிக்க மாட்டார்கள்.
இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்
அகப்பட்டுள்ள மக்கள்தான்
இராணுவத்தின், பிரதான எதிரிகள்
என்ற நிலையை
அரசுப்படைகள் விரைவில்
எதிர்கொள்ளப்போகின்றன.
அப்போது - குடாநாடு
எதிரியைப் பயமுறுத்தும்
போர்க்களமாக மாறும்.

இந்த வகையில் -
குடாநாட்டிற் செய்ததைப்போல
பாரிய படையெடுப்புக்களை
வன்னிப்பெரு நிலப்பரப்பில்
செய்வது என்பது
சிங்களப்படைகளின்
சக்திக்கு மீறிய ஒரு செயலாகும்.
இதற்கு
வன்னியின் நிலவிஸ்தீரணமும்,
அதுகாரணமாகச் சிங்களப்
படைகள் எதிர்கொள்ளவேண்டிய
பல்வேறு சிக்கல்களும், பிரதான
காரணமாகும். ஆயினும்,
வரையறுக்கப்பட்டவகையில்
சில இராணுவ நடவடிக்கைகளை-
அரசுப்படைகள் -
மேற்கொள்ளும்
சாத்தியங்களுமுண்டு.

சிங்கள அரசின் படைப்பலத்திற்
பெரும்பகுதி, இப்போது,
குடாநாட்டிற்குள்ளேயே
குவிந்துகிடக்கின்றது.
குடாநாடு பெரும்பாலும்
ஆக்கிரமிக்கப்பட்டுவிட்ட
இன்றைய நிலையில், அங்கிருந்து
கணிசமான துருப்பினரை
வாபஸ் வாங்கி -
அவர்களைப் பயன்படுத்தி,
வன்னியில் பாரிய
ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை
மேற்கொள்ளலாம் என்ற கணிப்பு
சிங்கள அரசிடம்
நிச்சயம் இருக்கும்.
ஆயினும், குடாநாட்டிற்குள்
பரவலான முறையில்
கெரில்லாத் தாக்குதல்களைப்
புலிகள் ஆரம்பித்துவிட்டனர்.
அத்துடன்,
சிவில் நிருவாகம் என்ற பெயரில்
இராணுவ நிர்வாகத்தை
நடாத்தவேண்டிய அவசியம்
அரசுக்கு எழுந்துள்ளது.
இதன் மூலமே, குடாநாட்டு
இராணுவத்தின் தேவைகளையும்
போராட்டத்தை நசுக்கும்
நோக்குடனான சதிகளையும்
சந்திரிகா அரசு,
மேற்கொள்ளமுனையும்.
இத்தகைய
யதார்த்தசூழல் காரணமாக,
வன்னியில் பாரிய
இராணுவ நடவடிக்கைகளை
மேற்கொள்ள வேண்டும் என்ற
அரசின் விருப்பை
நிறைவேற்றப்
படையினருக்குச் சந்தர்ப்பங்கள்
இல்லாது போகின்றன.

வன்னிப் பெருநிலப்பரப்புமீது-
சிங்களப்படைகள் -
நடாத்தவிரும்பும்
இராணுவ நடவடிக்கைகள்
சிலவேளை,
தோல்விகளைத் தழுவலாம்.
அல்லது, குறித்த சில
நிலப்பரப்புக்கள்
எதிரியின் பிடிக்குட் செல்லலாம்.
இன்றைய
நெருக்கடியான நிலையில்
இவைபற்றி எதிர்வுகூறுவது
கடினம். ஆயினும்,
வன்னியைப் பாதுகாக்க வேண்டிய
இன்றியமையாத பணி
எம் அனைவர்முன்னும் உள்ளது.

புகுத்தும் எண்ணத்துடன்
சில இராணுவ நடவடிக்கைகளை
அரசுப்படைகள் மேற்கொள்ள
முனையலாம்.

இவ்விதம்,
வன்னிமீதான படையெடுப்பிற்கு
அரசைப் பொறுத்தளவில்
பல்வேறு அத்தியாவசியக்
காரணிகள் இருக்கின்ற போதிலும்,
பெரிய அளவிலான
படையெடுப்புக்களை
நடாத்தக்கூடிய நிலையில்
சிங்களப் படையினர் உள்ளனரா ?
என்ற கேள்வியை எழுப்பி
விடைதேட முயல்வது சிறந்தது.

வன்னியைப் படையினர்
கைப்பற்றுவார்களா? என்ற
கேள்விக்கு விடைகாணமுன்னர்

குடாநாட்டைப் படையினர்
எங்கனம் கைப்பற்றினர் என்ற
கேள்விக்கு விடைகாண்பது
சிறந்தது.

குடாநாட்டைக் கைப்பற்றச்
சிங்களப் படைகள்
கிழக்கைக் கைவிட்டன
என்பதுதான்;
உண்மை நிலையாகும்.

அதன் மூலமே
தேவையான துருப்புக்களையும்
வேண்டிய படைக்கலன்களையும்
அரசுப்படைகள் ஒன்று சேர்த்தன.
ஒன்று சேர்க்கப்பட்ட
அந்தப் படைப்பலந்தான்
குடாநாட்டைக் கைப்பற்றியது.
இந்த உண்மையை எவரும்
மறுக்க மாட்டார்கள்.

புலிகள் இயக்கத்தின்
இராணுவபலம் காரணமாகவும்,
அரசுப் படைகளின் இயலாமை
காரணமாகவும்
அதுவா ? இதுவா ? என்ற
தேர்வுநிலைக்கு
அரசுப் படைகள் செல்வது
தவிர்க்க முடியாதது.




**எதிரியைப் பயமுறுத்தும் போர்க்களமாகக் குடாநாடு மாறும்!**

# அவலத்தைத் தந்தவருக்கு அதைத் திருப்பிக்கொடு

அது, 1987 ஒக்ரோபர் 10 ஆம் நாள். ஈழத் தமிழரின் போராட்ட வரலாற்றில் அந்தநாள் மறக்கப்படவே முடியாதது. அன்றுதான் 'கோலியாத்' (இந்தியா) என்ற அரக்கன், சிறுவனான 'டேவிற்'றை (புலிகள்) சண்டைக்கு இழுத்த நாள்.

அதாவது, கிள்ளுக்கீரைகள் என நினைத்து தமிழீழ விடுதலைப் புலிகளைக் கிள்ளி எறிய, இந்திய அரசு முடிவெடுத்த நாள்.

ஆயினும், அந்தக் ''கிள்ளுக்கீரைகள்'' 'காஞ்சோண்டி'களாக மாறி இந்திய ஆக்கிரமிப்பை அரிக்கத் தொடங்கிய நாளும் அதுதான்.

அந்த நாட்களில், யாழ். பல்கலைக் கழகத்திற்கு மேற்குப் புறமாக உள்ள பிரம்படி என்ற சிற்றூரில், தலைவர் பிரபாகரனின் பாசறை இருந்தது. அதேவேளை பல்கலைக்கழகத்திற்குத் தெற்குப் புறமாக - அதனை அண்டித் தலைவரின் இன்னொரு பிரதான முகாம் இருந்தது. அன்று காலையே அந்த முகாமுக்குச் சென்ற தலைவர் அவர்கள் தளபதிகளை அழைத்து, போருக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிக்கொண்டிருந்தார்.

இதேவேளை, யாழ். கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரை வெளியேற விடாது புலிகள் எதிர்த் தாக்குதல் தொடுத்தனர். யாழ். கோட்டைப் பகுதியில் சண்டை தொடங்கியது.

அப்போது, பலாலி இந்தியப் படைத் தலைமையகத்திலிருந்து மேஜர் பெரியசாமி என்ற பெயருடைய இராணுவ அதிகாரி, புலிகளின் தலைமைப்பீடத்துடன் 'வோக்கி' மூலம் தொடர்புகொள்ள முயன்றார். (இந்தியப் படையுடனான சமாதான காலத்தில் இந்த இராணுவ அதிகாரி, புலிகளுக்கும் - இந்திய உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையேயான தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி இருந்தார்).

மேஜர் பெரியசாமியின் அழைப்புச் சத்தத்தைக் கேட்ட தலைவர் அவர்கள், தானே 'வோக்கி'யை எடுத்து பெரியசாமியுடன் தொடர்புகொண்டார்.

''பெரியசாமி...... பெரியசாமி —... இங்கே நான் பிரபாகரன் பேசுகின்றேன்'' என்று பதில் கொடுத்தார்.

எதிர்முனையில் இருந்து கிடைத்த இந்த எதிர்பாராத பதில் அழைப்பால் திடுக்குற்ற மேஜர் பெரியசாமி, ''யார் பிரபாகரனா? வணக்கம்சார்'' என்று தனது ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திவிட்டு ஏதோ கதைக்க முயன்றவரைக் குறுக்கிட்ட தலைவர் அவர்கள்,

''நீங்கள் ( இந்தியப் படை ) தேவையற்ற முறையிற் போரை ஆரம்பித்துள்ளீர்கள் நாங்களும் போருக்குத் தயார் என உங்களது தளபதிகளிடம் சொல்லுங்கள். இனி போர்க்களத்தில் சந்திப்போம்'' என்று கூறிவிட்டு, 'வோக்கி'யின் இயக்கத்தை நிறுத்தினார்.

மாரிமழையும் தீவிரமடைந்தது. போரும் தீவிரமடைந்தது.

போரில் இந்தியப் படைகளை வெல்ல முடியாது என்ற கருத்தை எமது மக்களில் பலர் மிகவும் உறுதியாக வைத்திருந்தார்கள். அதுபோலவே தமிழ் மக்களை இந்தியப் படை கொலைசெய்ய மாட்டாது என்ற கருத்தையும், எமது மக்கள் நம்பிக்கையுடன் வைத்திருந்தார்கள். இதனால், எறிகணை வீச்சில்லாத, வான் வழித் தாக்குதல்கள் இல்லாத, ஒரு சண்டைபற்றி மக்களிற் பலர் கற்பனை செய்துகொண்டிருந்தனர்.


ஆனால், போர் தொடங்கிய அன்றே பிரம்படியில் இந்தியப் படைகள் புரிந்த கொடூரமான படுகொலைகள், மக்களை அதிர்ச்சிக்கும், அச்சத்திற்கும் உள்ளாக்கின. அதைத் தொடர்ந்து யாழ். கோட்டை மற்றும் பலாலிப் படைத்தளங்களில் இருந்து ஏவப்பட்ட ஆட்டிலறி எறிகணைகள் அகதி முகாம்களிலும், கோயில்களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் விழுந்து மக்களைப் பலிகொள்ளத் தொடங்கின.

இந்தியாவின் அகிம்சை முகமூடியை, அதன் ஆட்டிலறிகளும், எஸ். எல். ஆர். துப்பாக்கிகளும் கிழித்துக்கொண்டிருந்தன.

இந்த இடத்தில், வேதனை நிறைந்த ஒரு சுவாரசிய சம்பவத்தைக் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. இந்திய - புலிகள் போர் கடுமையடைந்துகொண்டிருந்தபோது, இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே கிரிக்கெட் போட்டி ஒன்று நடந்துகொண்டிருந்தது; அந்தப் போட்டியில இந்தியா தோற்றுவிட்டது. இந்தத் தோல்விச் செய்தியை வானொலி வர்ணனையாளர் அறிவித்ததும், அதைப் பலாலியில் இருந்தபடி செவிமடுத்துகொண்டிருந்த பிரிகேடியர் பெர்னாண்டஸ் என்ற இந்தியப் படை அதிகாரி, தனது ஆட்டிலறிப் படைக்கு தொலைத்தொடர்பு கருவி ஊடாக இவ்வாறு உத்தரவிட்டார்.

''இந்தியாவின் கிரிக்கெட் தோல்வியை புலிகள் கொண்டாடப்போகின்றார்கள். எனவே, உடனடியாக ஆட்டிலறித் தாக்குதல்களை மேற்கொள்ளவும்.''

இந்த உத்தரவைத் தொடர்ந்து கோண்டாவில். கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர், மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளை நோக்கிச் சில நிமிட நேரங்கள் - பலத்த ஆட்டிலறித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.



இந்தியக் கிரிக்கெட் குழு ஒரு போட்டியில் தோற்றதால், ஒரு இராணுவ உயர் அதிகாரிக்கு ஏற்பட்ட பைத்தியக்காரத்தனமான கற்பனை காரணமாகப் பிறந்த கட்டளையால், எமது மககளில் எத்தனை பேர் பலியானார்கள்!

இந்திய - புலிகள் போர் தொடங்கி ஒன்று, இரண்டு மாதங்களில் குடாநாடு இந்தியப் படைகள் வசமாகிவிட்டது. அதேவேளை புலிகளின் படையணிகள் சிதைந்தும், சேதப்பட்டுச் சிதறுண்டும் காணப்பட்ட ஒரு இக்கட்டான காலப்பகுதி அது. சுருக்கமாகச் சொன்னால், இராணுவ ரீதியாகப் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டுப் போய் நின்ற நெருக்கடியான வேளை அது. அதேவேளை தலைவரின் பாசறை அமைந்திருந்த மணலாற்றுக் காட்டுக்குள் ஒரு பாரிய படையெடுப்பைச் செய்ய, இந்தியப் படைகள் ஆயத்தம் செய்துகொண்டிருந்தன. உணவு, மருத்துவம், படையணிகளுக்கிடையேயான தொடர்புகொள்ளல் என்பவை பெரிதும் பாதிக்கப்பட்டு, போராளிகள் ஒரு விரக்திச் சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்த காலகட்டம் அது. இதனால் புலிகள் இயக்கமே முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுவிடுமோ என்ற ஒரு அபாயம் நிலவிய வேளை அது, அந்தளவுக்கு இந்தியப் படைகள் ஒரு பாரிய இராணுவ - உளவியல் நெருக்கடியை எமது இயக்கத்திற்கும், எமது மக்களுக்கும் கொடுத்துக்கொண்டிருந்தன.

இந்தநிலையில் இந்தப் பாரிய நெருக்கடியைத் தீர்த்து இயக்கத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசுடன் சமாதானப் பேச்சுக்குப் போவதே புத்திசாதுரியமான வழி என, எமது மூத்த உறுப்பினர்கள் சிலர் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தலைவருக்குச் செய்தி அனுப்பினார்கள்.

இந்தச் செய்திக்குத் தலைவர் எந்தப் பதிலையும் அனுப்பவில்லை.

சமாதானப் பேச்சிற்கு எப்போது நாம் செல்லவேண்டும் என்பதில் தலைவர் ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார். அதாவது, இராணுவரீதியில் பலமான நிலையில் இருந்தபடிதான் நாம் சமாதான பேச்சிற்குச் செல்லவேண்டும்; அப்போதுதான் எமது உரிமைகளை நாம் வலியுறுத்திப் பெறமுடியும். பலவீனமான நிலையில் இருந்தபடி சமாதானப் பேச்சிற்குச் சென்றால் - அதுவும் வலியச் சென்றால் சமாதான உடன்பாடு என்ற போர்வையில் எமது இனத்தின் அடிமைச் சாசனத்தையே எதிரி எம்மிடமிருந்து பெற முனைவான் என்பதில், தலைவர் கவனமாக இருக்கின்றார்.

சமாதானப் பேச்சிற்குச் செல்வதே சிறந்தது என்று எமது மூத்த உறுப்பினர்கள் கோரிய அந்தக் காலத்தில், புலிகள் இயக்கம் உண்மையில் பலவீனமாகவே இருந்தது; எனவேதான், இந்தச் சமாதான ஆலோசனைக்குத் தலைவர் பதில் அனுப்பாதுவிட்டார்.

ஆனால், மீண்டும் மீண்டும் பதில் வேண்டி அந்தச் செய்தி வந்தபோது, தொலைத் தொடர்பு சாதனம் ஊடாகத் தலைவர் இவ்வாறு பதிலளித்தார்.

''அமெரிக்கப் படையுடன் போரிடத் தொடங்கும்போது தாம் 30 வருடங்களிற்கு மேல் போர் புரியவேண்டிவரும் என வியட்நாம் தலைமை நினைத்திருக்கமாட்டாது. ஆனால் அவர்களிடம் இருந்த தன்நம்பிக்கையும் துணிவும்தான் அவர்களை உறுதியுடன் வைத்திருந்தது; வெற்றியையும் பெற்றுக் கொடுத்தது.

அந்த தன்நம்பிக்கையும் துணிவும் என்னிடம் இருக்கின்றது.''

இந்தச் செய்தியின் உட்பொருளை அந்த மூத்த உறுப்பினர்களும் புரிந்துகொண்டு தொடர்ந்தும் போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டார்கள்.

அவலத்தையும் அபாயத்தையும் கண்டுவிட்டு மனம் இடிந்துபோவது மனித சுபாவம். இந்த மனித குணத்தை, ஆக்கிரமிப்பாளர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவதை, உலக வரலாற்றில் அன்றிலிருந்து இன்றுவரை காணலாம்.

போராடும் மக்கள் மீது அவலங்களை விதைத்து, தேசத்தின் உறுதிப்பாட்டை உடைத்துப் போரை வென்று மக்களை அடிமைகொள்வது, ஒரு ஆக்கிரமிப்புச்

(9ஆம் பக்கம் பார்க்க)

# ஆறுநாள் யொம் கிப்பூர் போரில் இஸ்ரேலின் சேமப்படை

**1973** ஆம் ஆண்டு வெடித்த கிப்பூர் போரின் போதும், 1967 ஆம் ஆண்டு வெடித்த ஆறுநாள் போரின் போதும் இஸ்ரேலின் வெற்றிக்குப் பெரும்பங்களித்தவர்கள் சேமப்படையினர் ஆவார். அவர்கள் குறித்தும், இஸ்ரேலியா படை குறித்தும் 1975 ஆம் ஆண்டு வெளிவந்த பிரிட்டிஸ் ஆமி றிவ்யூவில் ( British Army Review ) வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளைக் கீழே தருகின்றோம்.

1956 ஆம் ஆண்டு சினாய்யில் எகிப்துடன் ஏற்பட்ட சமரின்பின் இஸ்ரேலானது தனது இஸ்ரேலிய பாதுகாப்புப் படையமைப்பைச் சீரமைத்தது ( Israel Defendce Forces IDF ) எதிரியை எதிரியின் நிலப்பரப்புக்குள்ளேயே எதிர்கொண்டு வெல்லக்கூடிய வகையில் - விரைந்து செயற்படக்கூடிய வகையில் - தனது படைக்கட்டமைப்பை மாற்றி அமைத்தது. தொடர்ந்து வெடித்த இரண்டு போரிலும் இஸ்ரேலின் வெற்றிக்குச் சேமப்படையினர் பெரும் பங்களித்தார்கள். நிரந்தரப் படையினருக்கும் சேமப்படையினருக்கும் இடையே வேறுபாடு காண இயலாத வகையில் சேமப்படையினரும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

இஸ்ரேலானது நாற்புறமும் பகைநாடுகளால் சூழப்பட்டிருக்கும் ஒரு நாடாகும். பெரும் மக்கள் தொகை கொண்ட நாடுகளால் சூழப்பட்டு முற்றுகைக்குள்ளாகியிருக்கும் நாடுபோல இருக்கும் தம் சிறிய நாட்டைக் காப்பதற்கு முழு மக்களினதும் பங்களிப்பைப் பெறவேண்டிய தேவை இஸ்ரேலுக்கு உண்டு.

எடுத்தெறிந்துவிட்டுக் கடையை மூடிவிட்டு வெளியேறினார்; வானொலி கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்திலிருந்த ஒருவர் அதில் ஒலிபரப்பப்பட்ட சங்கேத மொழியைக் கேட்டபின் மெதுவாக அங்கிருந்து வெளியேறினார்.

ஒலிபெருக்கிச் சத்தங்களிடையே படையினர் அணிவகுத்துச் செல்வதைப் பார்த்திருக்கின்றேன். புகையிரத நிலையத்தில் கூட்டம் கூட்டமாகப் படையினர் நிற்பதைப் பார்த்திருக்கிறேன். மிகுந்த ஆரவாரத்துடன் அணிநடைப் பாடல்களுக்குச் சப்பாத்துக்கள் ஒலி எழுப்ப அணிவகுத்துச் செல்லும் படையினரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரு போதும்; ஒரு நாடானது அமைதியாக உறுதியுடன் தன் நாட்டைக் காக்க இங்குபோல அணிதிரண்டு எழுந்ததை நான் கண்டதில்லை.

யொம் கிப்பூர் போருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டு நாற்பத்தெட்டு மணி நேரத்துள்ளும், சினாய், கோலான் குன்றுப் பகுதகளில் இருபத்தி நான்கு மணி நேரத்துள்ளும் சேமப் படையினர் போர்முனையில் சண்டையிலீடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

சேமப்படையினரைத் திரட்டும் பொறுப்பைப் படைய மனித வலுப் பிரிவே வகிக்கின்றது. வானொலியில் சங்கேத மொழிகளை ஒலிபரப்புவதன் மூலமும், சினிமாத் திரையில் காட்டுவதன் மூலமும், தனிப்பட்ட முகவர்கள் மூலமும் அழைப்பு

ஓய்வு பெறுகின்றனர். ஆற்றலுள்ளவர்கள் மிகவும் இளவயதில் உயர் பதவிக்கு வரும் வாய்ப்புண்டு. ஆறு நாள் போரின் போது முதன்மைத் தளபதியாக இருந்த இராபினுக்கு அப்போது அகவை நாற்பத்தொன்றாகும். ( அண்மையில் இஸ்ரேலின் பிரதமராக இருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார் ) வான்படைத் தளபதி மொடேக்கேய் கொட்டின் அகவை நாற்பதாகும்.

## சேமப்படை

இப்படையணியே மிகவும் பெரியதாகும். இப்படையணியில் 75 ஆம் ஆண்டு இருநூற்றம்பதினாயிரம் ( 250,000 ) படையினர் இருந்தனர். இப்படையணி இரண்டு அகவைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது முதற் பிரிவு அகவை இருபத்தொன்றிலிருந்து அகவை முப்பத்தொன்பது வரை அடங்கும். இரண்டாம் பிரிவு அகவை முப்பத்தொன்பதிலிருந்து நாற்பத்தினான்கு வரை அடங்கும். ஆறுநாள் போரின்போது போதிய மனிதவலு இல்லாத காரணத்தால் ஆண்களுக்கு அகவை ஐம்பத்தைந்து வரை கூட்டப்பட்டது. பெண்களுக்கு அகவை இருபத்தாறு வரை கூட்டப்பட்டது.

ஒழுங்கமைப்புப் பயிற்சித் திறன் காரணமாக சேமப்படையானது அணிதிரட்டப்பட்டதும் செயற்படக்கூடிய நிலையிலிருக்கும். சேமப்படையணியின் ஒவ்வொரு பிரிவும் சிறு எண்ணிக்கையில் தொழில்சார் வீரர்கள், கட்டளை மேலாளர்கள், எழுதுவினைஞர்கள், பராமரிப்புப் பணியாளர் என்பவர்களைக் கொண்டிருக்கும். எப்போதும் போருக்குத் தயாரான நிலையிலேயே பிரிவுகள் இருக்கும்.

இப்பிரிவைச் சேர்ந்தோர் ஒவ்வொரு ஆண்டும் மூன்று கிழமைகள் தொடர் பயிற்சியைப் பெறுவார்கள். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு திங்களும் இரண்டு நாள் பயிற்சி பெறுவார்கள். முதுநிலை அரச ஆணை பெறாத மேலாளர்களும், மேலதிகமாகக் குழுநிலைப் பயிற்சிகளையும் முழுமையான அறிவையும் செயற்பாட்டையும் பெற்றிருப்பர். எடுத்துக்காட்டாக டாங்கிக் குழுவில் உள்ளோர் அவற்றை இயக்கவும். பேணவும் திருத்தவும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்கள்.

குறைந்த செலவில் பெரிய படையணியைப் பேணுவதற்கு இம்முறை உதவுகின்றது.

ஆறுநாள் போரில் சினாய் முனையில் ஒரு டிவிசன் கொமாண்டராகப் பணிபுரிந்த ஏரிக் சரோன் ( Arik Sharon ) தம் படைவீரர்கள் குறித்துக் கீழ்க்கண்டவாறு கூறினார். அவரின் கூற்றினூடாகச் சேமப்படையினரின் ஆற்றலை உணர்ந்துகொள்ள முடியும்.



இஸ்ரேலிய சேமப் படையினர். இந்தப் படைப் பிரிவானது, தேசிய நிரந்தரப் படைக்குத் துணையாகப், பொதுமக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ''துணைப் படை'' யாகும்.

இஸ்ரேலிய மக்களையும் படையையும் பிரித்துப் பார்க்க முடியாது. அவர்களும் பிரித்துப் பார்ப்பதில்லை. இஸ்ரேலின் இருப்பே, அதன் படை பலத்தில் தான் தங்கியுள்ளது. இஸ்ரேல் என்ற நாட்டின் இயக்க அச்சே அந்த நாட்டின்படைதான் என்பதை எல்லோரும் அறிவார்கள் இஸ்ரேலியர் எல்லோரும் பெரும்பாலும் தம் இளவயதில் கட்னாவில் ( Gadna ) அல்லது இளைஞர் கோரில் கடமையாற்றியிருப்பார்கள். கட்னாவில் பணியாற்றுவதன் மூலம் தம் நாட்டிற்குத் தேவையான படையைச் சேவை குறித்துப் புரிந்து கொள்கின்றார்கள். தம் நாட்டின் இருப்புக்கு அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் அதில் சேவையாற்றுவதைப் பெருமையாகக் கருதும் பண்பைப் பெறுகின்றார்கள். சேவையாற்றாதோர் இழிவாகப் பார்க்கப்படுவார்கள்.

''இஸ்ரேல் யொம் கிப்பூர் போருக்குத் தயாரானதைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்ற எழுத்தாளர், போர் குறித்து கீழ்க்கண்டவாறு எழுதினார்.

பத்திரிகை விற்பனை செய்துகொண்டிருந்த ஒருவர் ஒலிபெருக்கியில் சொல்வதைக் கேட்டுவிட்டு ''ஆ. அவர்கள் என்னையும் அழைக்கின்றார்கள்'' எனக் கூறியவண்ணம் தன் கடையை மூடிவிட்டு வெளியேறினார்; எதிர்த்தெருவில் விற்பனை செய்து கொண்டிருந்த பெண் திடீரெனத் தனது கைப்பையைப் பூட்டிய வண்ணம் புறப்பட்டுச் சென்றார்; பக்கத்தில் இறைச்சி விற்றுக்கொண்டிருந்தவர் தன் மேலங்கியை

விடுக்கப்பட்டு சேமப்படையினர் திரட்டப்படுகின்றனர்.

இஸ்ரேலின் காப்புப் படையில் இரு பெரும் பிரிவுகளுண்டு. ஒன்று நிரந்தரப் படைப்பிரிவு ( Sherut Quevah in Hebrew ) மற்றையது சேமப்படைப்பிரிவு ( Miluim )

நிரந்தரப் படையினர் இஸ்ரேலின் முதுகெலும்பு போன்றவர்கள். இவர்கள் இஸ்ரேலிய மக்கள் தொகையின் ஏழில் ஒரு பங்கினர். இப்படையணியில் 75 ஆம் ஆண்டு எண்பதினாயிரம் படையினர் இருந்தனர். இப்படையணியில்தொழில்சார்மேலாளர்கோர் ( Professional - Officer Corps ) அரச ஆணை பெறாத மேலாளர்கள், ( Non Commissioned Officers ) தொண்டர்கள், கட்டாயப் படையச் சேவையினர் அடங்குவர். அகவை பதினெட்டிலிருந்து இருபத்தொன்பது வரையும் உள்ள எல்லா ஆண்களும் மூன்று ஆண்டுகள் கட்டாயமாகப்படையில் சேவை ஆற்றவேண்டும். பெண்களுக்கு இந்த அகவை எல்லை பதினெட்டிலிருந்து இருபத்தாறு வரையாகும். அவர்கள் இரண்டு ஆண்டுகள் கட்டாயச் சேவை புரியவேண்டும். மற்றைய நாடுகளைப் போலல்லாமல் படைய மேலாளர்களும் போர் வீரர்களைப் போலவே எல்லா வகையான வாழ்க்கைத் தொழில்களிலுமிருந்தும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மூன்று ஆண்டுகள் பணிபுரிய வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவ்வொப்பந்தத்தை இரு தரப்பில் எவரும் புதுப்பிக்கலாம்.

உயர் பதவி வகிப்போர் அகவை ஐம்பதில்

'' எங்கள் வீரர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனங்களில், ஒழுங்கற்ற முறையில் ஆடையணிந்த நிலையில், பார்க்கும் போது ஒரு கும்பலைப் பார்ப்பது போல இருக்கும். ஆனால் அவர்கள் சிறந்த வீரர்கள், சிறந்த மேலாளர்கள்... சிறைப்பிடிக்கப்பட்ட போர்க்கைதிகள் எம் வீரர்களைப் பார்த்து என்ன எண்ணியிருப்பார்கள் என எண்ணிப் பார்க்கிறேன். எம்படையினர் வீர உணர்வு மிக்கவர்கள். எம்படையத்தில் நாம் ''முன்செல்லுங்கள்'' எனக் கூறுவதில்லை ''பின் தொடருங்கள்'' எனவே கூறுவோம். உயர்மட்டக் கொமாண்டரில் இருந்து டிவிசன் கொமாண்டர், பிரிகேட், கொம்பனி கொமாண்டர் வரை காட்டும் முன்னுதாரணம் தான் எம் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். டாங்கிகளும் ஆட்டிலறிகளும் நல்ல பயன்பாடுடையவை என்ற போதிலும், அவை வெற்றிக் குரிய காரணங்களாகா. எம்மிலும் எதிரியிடம் சிறந்த டாங்கிகள் உண்டு... உண்மையில் அவர்களிடம் எம்மிடம் இருப்பதிலும் அதிக அளவிற் படைக் கலன்கள் இருந்தன. எப்படி இருந்த போதும் எமது கொமாண்டர்கள் மிகச் சிறந்தவர்கள். இந்த வீரர்கள் சாதாரண வேளையில் ஒரு கடைச் சிப்பந்தியாக அல்லது ஆசிரியராகப் பணிபுரிபவர்களாக இருப்பார்கள். முதல் நாள் அப்படி இருப்பவர்கள் மறுநாட் சண்டையில் எதிரிகளைப் புயல்போலத் தாக்குவதை எப்படி விபரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. இதற்குரிய காரணத்தை நான் படையில் சேர்ந்த காலத்திலிருந்து புரிந்து கொள்ள முடிந்ததில்லை .. இந்த நாட்டின் உயிர்ப்பில் இருக்கும் பிடிப்பின் ஒரு தன்மையே அவர்களை இப்படி செயற்பட வைக்கின்றது போலும். '' o

# இலங்கை அரசாங்கத்தின்

# பாதுகாப்புச் செலவின் போக்கு

அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு வரும் வரவு செலவுத் திட்டங்கள் இராணுவ வரவு செலவுத் திட்டங்களாக அமைந்திருப்பதனை அவதானிக்கலாம். பாதுகாப்பமைச்சிற்கு அதிகளவில் நிதியினை ஒதுக்குவதும், அந்த நிதியினைத் திரட்டும் வழி முறைகளைக் கூறுவதுமே அண்மைக்கால வரவு செலவுத் திட்டங்களின் பிரதான நோக்கமாக இருந்துள்ளது. உண்மையில் நிதியமைச்சரினால் அன்றி பாதுகாப்பு அமைச்சரினால் இலங்கையில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதே பொருத்தமாயிருக்கும். அந்தவகையில் நிதியமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகிய இரண்டையும் தனது பொறுப்பிலேயே ஜனாதிபதி சந்திரிகா வைத்திருப்பதும் பொருத்தமே.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற குறுகிய காலத்தில் இரண்டு முழுமையான வரவு செலவுத் திட்டங்களையும் ஒரு சிறிய (மினி) வரவு செலவுத் திட்டத்தினையும் சமர்ப்பித்துள்ளது. 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தினையும், அதே ஆண்டு மே மாதம் ஒரு மினி வரவு செலவுத் திட்டத்தினையும், அதே ஆண்டு நொவம்பர் மாதம் தனது இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தினையும் சமர்ப்பித்தது. ஒரேயாண்டில் மூன்று வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்த பெருமை இவ் அரசாங்கத்திற்கு உண்டு.

**அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு**
**1980 - 1996**


| ஆண்டு | பாதுகாப்புச் செலவு (மில். ரூபா) | மாற்றம் (சத வீதத்தில்) | மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|
| 1980 | 458 | - | 0.5 % |
| 1981 | 479 | 4.6 % | 0.5 % |
| 1982 | 486 | 1.5 % | 0.5 % |
| 1983 | 979 | 101.4 % | 0.7 % |
| 1984 | 1275 | 30.2 % | 0.8 % |
| 1985 | 4614 | 261.9 % | 2.8 % |
| 1986 | 4351 | - 5.7 % | 2.4 % |
| 1987 | 6001 | 37.9 % | 3.1 % |
| 1988 | 4890 | - 18.5 % | 2.2 % |
| 1989 | 4119 | - 15.8 % | 1.6 % |
| 1990 | 6906 | 67.7 % | 2.1 % |
| 1991 | 10609 | 53 6 % | 2.9 % |
| 1992 | 13231 | 24.7 % | 3.1 % |
| 1993 | 20463 | 54.7 % | 4.1 % |
| 1994 | 26444 | 29.2 % | 4.6 % |
| 1995 | 32134 | 21.5 % | 4.8 % |
| • 1996 | 37984 | 18.2 % | 5.0 % |

* ஒதுக்கப்பட்ட தொகை. அண்மையில் இது 42000 மில் ரூபாவாக உயர்த்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவின் போக்கினை மூன்று கட்டங்களாகப் பிரித்து நோக்கலாம்.

1. முதலாம் கட்ட ஈழப்போர் - 1983 - 89 காலப்பகுதி
2. இரண்டாம் கட்ட ஈழப்போர் - 1990 - 94 காலப்பகுதி
3. மூன்றாம் கட்ட ஈழப்போர் - 1995 -

## 1 ஆம் கட்ட ஈழப்போர்




1983 - 89 காலப்பகுதியிலான ஏழாண்டுகளில் அரசாங்கத்தின் மொத்தப் பாதுகாப்புச் செலவு 25129 மில். ரூபாவாகும். இக்காலப் பகுதியில் சராசரி வருடாந்தம் 3590 மில். ரூபாவினை அரசாங்கம் பாதுகாப்புக்குச் செலவிட்டது. மேலும் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்புச் செலவில் ஒரு வீழ்ச்சியை அவதானிக்கலாம். இலங்கையின் சார்பில் இந்திய இராணுவம் ஈழப்போரை நடாத்திய காலமே இதுவாகும். அதாவது தமிழீழப் போரை நடாத்தி களைத்துப் போய் இலங்கை இராணுவம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காலகட்டமே இதுவாகும்.


## 2 ஆம் கட்ட ஈழப்போர்

1990 - 94 இற்கு இடைப்பட்ட ஐந்தாண்டு கால 2ஆம் கட்ட ஈழப்போருக்காக இலங்கை அரசாங்கம் 77653 மில். ரூபாவினைச் செலவிட்டது. இக்காலப்பகுதியில் சராசரியாக வருடாந்தம் 15531 மில். ரூபாவை அரசாங்கம் போருக்காகச் செலவிட்டது. இலங்கை இராணுவம் பிரமாண்டமான அளவில் விரிவடைந்தது இக்கால கட்டத்திலேயே ஆகும். 1989ஆம் ஆண்டு பாதுகாப்புப் படையினரின் சம்பளத்திற்காக அரசாங்கம் 1723 மில். ரூபாவினைச் செலவிட்டது. ஆனால் 1994ஆம் ஆண்டு இச்சம்பளக் கொடுப்பனவு 10604 மில். ரூபாவாகும். எனவே 2ஆம் கட்ட ஈழப்போர்க் காலத்தில் பாதுகாப்புப் படையினரின் சம்பளக் கொடுப்பனவுக்காக அரசாங்கம் செலவிட்ட தொகை 513 சதவீதத்தினால் அதிகரித்தமை, பாதுகாப்புப் படையினரின் ஆட்பலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

மேலும் 2ஆம் கட்ட ஈழப்போர்க் காலத்தில் போர்த் தளபாடங்களின் கொள்வனவுக்காகச் செலவிட்ட தொகையிலும் பெரிய அதிகரிப்பினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. போர்த்தளபாடங்களின் கொள்வனவிற்காகச் செலவிடப்பட்ட தொகை 1989இல் 2396 மில். ரூபாவிலிருந்து 1994இல் 15840 மில். ரூபாவாக அதிகரித்திருந்தது. இவ்வகையில் 2ஆம் கட்ட ஈழப்போர்க் காலத்தில் போர்த் தளபாடங்களின் கொள்வனவுக்குச் செலவிட்ட தொகையில் ஏற்பட்ட 561சதவீதம் அதிகரிபபு இலங்கை இராணுவத்தின் ஆயுதபலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

## 3 ஆம் கட்ட ஈழப்போர்

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி சமாதானப் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது. 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசாங்கம் தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தினைச் சமர்ப்பித்தபோது பாதுகாப்புச் செலவாக 24144 மில். ரூபாவினை ஒதுக்கியிருந்தது. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்தவுடன் மே மாதம் ஒரு மினி வரவு செலவுத் திட்டத்தினை அரசாங்கம் சமர்ப்பித்தது. பாதுகாப்புச் செலவிற்கு மேலும் 13200 மில். ரூபாவினை அரசாங்கம் ஒதுக்கியது. இதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்காக பாதுகாப்பு வரியினை 3.5வீதத்திலிருந்து 4.5 வீதமாக உயர்த்தியது. மேலும் குறிப்பிட்ட சில பொருட்கள் மீதான கலால் வரியினை உயர்த்தியது. இலங்கை மின்சார சபையின் லாபத்திலிருந்து 1500 மில்லியன் ரூபா பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கப்பட்டது. அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்பதன் மூலம் 1000 மில் ரூபா பெறப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவில் 1000 மில். ரூபா மீளப்பெறப்பட்டு பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்படடது இவ்வாறு பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்தியே 1995 ஆம் ஆண்டு மூன்று அன்ரனோவ் விமானங்கள் உட்பட ஏராளமான போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்து ''முன்னோக்கிப்பாய்தல்'', ''இடிமுழக்கம்'', ''சூரியப்பிரகாசம்'' போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.




முதலாம் கட்ட ஈழப்போரின்போது 3590 மில். ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவு 2 ஆம் கட்ட ஈழப்போரின் போது 15531 மில். ரூபாவாக அதிகரித்து. 3 ஆம் கட்ட ஈழபபோரின்போது அதாவது தற்போது வருடச் சராசரி பாதுகாப்புச் செலவு 35060 மில். ரூபாவாக உள்ளது 1983 - 89ற்கு இடைப்பட்ட ஏழாண்டுகளின் மொத்தப் பாதுகாப்புச் செலவு 25129 மில். ரூபா. ஆனால் தற்போது ஓராண்டின் பாதுகாப்புச் செலவு 39000 மில. ரூபாவாகும். 1983 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0. 7 வீதம் பாதுகாப்பிற்குச் செலவிடப்பட்டது.

ஆனால் இன்று உள்நாட்டு உற்பத்தியில் 5 வீதம் பாதுகாப்பிற்குச் செலவிடப்படுகின்றது. வளர்ச்சியடைந்த கைதொழில் நாடுகளில் கூட சராசரியாக உள்நாட்டு உற்பத்தியில் 3.4வீதம் தான் பாதுகாப்புக்குச் செலவிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

**சி. வரதராஜன்**

அரசாங்கத்தின் அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவு பொருளாதாரத்தின் மீது பல சுமைகளை ஏற்படுத்தி விடுகின்றது. பாதுகாப்புச் செலவுக்காக நிதியின் ஒரு பகுதியினைப் பெறும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டு அனைத்து விற்பனைகள் மீதும் 1வீதப் பாதுகாப்பு வரியினை அரசாங்கம் விதித்தது.

காலத்துக்குக் காலம் இவ்வரி வீதம் உயர்த்தப்பட்டு வந்து தற்போது 4.5 வீத வரி விதிக்கப்படுகின்றது. இவ்வரி விதிப்பு பொருட்களின் விலைகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தி பணவீக்க விளைவுகளுக்கு வழிவகுக்கின்றது. பாதுகாப்பு வரி மூலம் பெறப்படும் வருமானம் அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவின் 40 சதவீதத்தினை மட்டுமே நிதியிடுவதற்குப் போதுமானதாகும். இதன் விளைவாக மேலும் நிதியினைப் பெறும் நோக்கத்துடன் 1996 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ''தேசத்தைப் பாதுகாக்கும் நிதி'' என்ற பெயரில் ஒரு புதிய வருமான வரியை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி

(9ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்று அச்சம்

தமிழர் தொடர்பாகக் குறிப்பாக, தென்னிந்தியத் தமிழர் தொடர்பாகச் சிங்கள இனத்திற்குக் காலங்காலமாக ஒரு அச்சம் இருந்து வருகின்றது. தென்னிந்தியாவை அரசாண்ட பண்டைய தமிழ் மன்னர்கள் - இலங்கைத்தீவு மீது அடிக்கடி படையெடுத்துச் சிங்கள இராசதானிகளைக் கைப்பற்றி, ஆட்சிபுரிந்தனர். இதனால் தமிழ் நாட்டின் இன்றைய ஆட்சியாளர்கள் தொடர்பாக, ஒரு அச்சத்தை அல்லது சந்தேகப்பார்வையைச் சிங்கள ஆட்சியாளர்கள் கொண்டுள்ளனர் என்பது உண்மை.

ஈழத்தமிழருக்கு ஆதரவாகத் தமிழ் நாட்டின் ஆட்சியாளர் ஒருவர் குரலெழுப்பினால், அதை அபாயகரமான விடயமாகப் பார்க்கும் பண்பு, சிங்கள ஆட்சியாளர்களிடம் உள்ளது.

திரு. எம். ஜி ஆர் அவர்கள் புலிகளை ஆதரித்த போதும் சரி, அண்மைக்காலத்தில், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் மற்றும் மறுமலர்ச்சி தி. மு. க. தலைவர் திரு. கோபாலசாமி போன்றோர் புலிகளை ஆதரித்துக் குரலெழுப்பியபோதும்சரி, சிங்கள ஆளும் வர்க்கம் மிரட்சி அடைந்து - கண்டணக் குரல் எழுப்புவது வழமை.

தமிழ்நாட்டின் புவியியல் அமைவிடம், அதன் 6 கோடி மக்கள், பிரமாண்டமான அதன் வளம் என்பன சிங்கள இனத்திற்குச் சிம்மசொப்பனமாக விளங்குகின்றன. என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டு ஆட்சியாளர்களின் உதவி, புலிகள் இயக்கத்திற்குக் கிடைக்குமானால், இலங்கைத்தீவில், தனி அரசொன்றைப் புலிகள், நிறுவிவிடுவர் என்ற அச்சம் சிங்கள தேசத்தில் உள்ளது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் புலிகள் எதிர்ப்பு நிலைப்பாடு. சிங்கள ஆட்சியாளர்களுக்கு நிம்மதியைக் கொடுத்திருந்தது.

ஆனால், கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் - அந்த நிம்மதியை இழந்து, சிங்கள ஆளும் வர்க்கம், தவிக்கின்றது.

## செய்தி ஆய்வு

கலைஞர் அவர்களின் தமிழ் இனப்பற்றும், தமிழ்த் தேசியத்தை வளர்த்துவிட்டதில் அவருக்கு இருந்த பாரிய பங்கு காரணமாகவும் அவரைச் சிங்கள இனம் ஒரு தீவிரவாதத் தமிழ்த் தலைவராகவே நோக்குகின்றது.

பெரியார் - அண்ணா ஆகியோருடன் இணைந்து திராவிட நாடு கோரிக்கைப் போராட்டங்களின்போது கலைஞர் அவர்கள் வகித்த பங்கு பணிகள் சாதாரணமானதல்ல. அத்துடன் தமிழீழ மக்களின் தனிநாட்டிற்கான ஆயுதப் போராட்டத்தையும் கலைஞர் அவர்கள் வெளிப்படையாக ஆதரித்து இருந்தும் பேரினவாதிகள் அறிந்த ஒன்றுதான். இந்த நிலையில் மீண்டும், புலிகள் இயக்கத்திற்கு ஆதரவுக்கரம் நீட்டிவிடுவார் என்ற அச்சம் சிங்கள தேசத்தில் எழுந்துள்ளது.

பதவி ஏற்றதும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக அவர் தெரிவித்த கருத்துக்கள் சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு மீண்டும் அச்சத்தை ஊட்டியுள்ளது. சிங்கள தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொழும்பு ஆங்கில நாள். வார ஏடுகள் கலைஞரைக் கண்டண விமர்சனம் செய்வதில் அக்கறை காட்டுகின்றன.

நண்பனா? எதிரியா? என்ற தலைப்பில் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுஆசிரியர் தலையங்கம் எழுதி இருந்தது. கலைஞர் கருணாநிதியை விழித்தே அது எழுதப்பட்டிருந்தது. புலிகளின் நண்பன், சிறிலங்காவின் எதிரி என்ற நிலையில் கலைஞரை - அப் பத்திரிகை நோக்கியுள்ளது.

ஈழத்தமிழர்களைச் - சிங்களப்படையினர் எவ்விதம் பகைமை உணர்வுடன் பார்க்கின்றனரோ - அதுபோலவே தமிழ்நாட்டின் மீனவர்கள் அடிக்கடி சிங்களக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதும், அவர்களின் மீன்பிடி உபகரணங்கள் நாசமாக்கப்படுவதும், நாம் அறிந்த செய்தி. ஆயினும், இவை தொடர்பாக முன்னைய தமிழக முதல் அமைச்சர் எந்த ஒரு உருப்படியான நடவடிக்கையும் எடுக்காது இருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் கலைஞர் அவர்கள் அவ்வாறு மெத்தனமாக இருக்கமாட்டார். இதனால், தமிழ்நாட்டின் அரசிற்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. தமிழ்நாட்டு மீனவர்கள் சிங்களப் படைகளால் - படுகொலை செய்யப்படும்போது இந்திய மத்திய அரசின்மீதும் அழுத்தங்களைப் பிரயோசித்து - சிங்களக் கடற்படைக்கு மூக்கணாங்கயிறு போடும் நடவடிக்கைகளிலும் - கலைஞர் - ஈடுபடுவார் என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. இவை கலைஞர் மீதான அச்சத்தையும் - அதிருப்தியையும் சிங்கள தேசத்தில் அதிகரித்துவிட்டுள்ளன. O

## தொங்கு நாடாளுமன்றத்தின் அடுத்த தேர்தல் எப்போது!

தேவகௌடாவின் அரசு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப்போகின்றது?.

அதேவேளை, ஈழத்தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாகத் தேவகௌடாவின் அரசு எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும்? இவை தான் இன்றைய பிரதான கேள்விகளாக இருக்கின்றன.

தேவகௌடாவின் அரசுக்குக் காங்கிரஸ் ஆதரவளிப்பதற்குப் பிரதான காரணம், அதன் பிரதான அரசியல் எதிரியான பா. ஜ. கட்சியை ஆட்சி செய்யவிடாது தடுப்பதற்கே என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறியுள்ளனர். 12 நாட்கள் பதவியில் இருந்தபின் வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ. கட்சி அரசு கவிழ்ந்து விட்டது இனி தேவகௌடாவின் அரசு நீடித்து நிலைக்க வேண்டும்என்று காங்கிரஸ்கட்சி விரும்ப ஏதாவது விசேட காரணங்கள் இருக்குமா?

தேவகௌடாவின் அரசும் கவிழும் நிலை வந்தால் புதிய பொதுத்தேர்தல் என்பது தவிர்க்கமுடியாது போகும், ஆனால், தேர்தல் நடந்து ஒருசில வாரங்களுக்குள் அல்லது மாதங்களுக்குள் மீண்டுமொரு பொதுத்தேர்தலைச் சந்திக்கக் காங்கிரஸ்கட்சி தயாரா? என்ற கேள்வியிலேயே தேவகௌடா அரசின் ஆயுளும் தங்கியுள்ளது.


தேர்தல் நடந்து ஒருசில வாரங்களே கழியாத இந்த நிலையில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்குச் செல்லப் பொதுவாக எந்த ஒரு கட்சியும் தயாராக இருக்கமாட்டாது என ஒரு அபிப்பிராயம் உண்டு இந்தக்கருத்தை ஆதரிக்கப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகிறன. இம்முறை நாடாளுமன்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற் பெரும்பகுதியினர் புதுமுகங்களாவர். இதனால், தாம் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவோமா? என்ற அச்சம் இவர்களிடம் உள்ளது. அத்துடன், அடுத்தடுத்துத் தேர்தல்களைச் சந்திக்கத் தேவையான நிதிவளத்தை வழங்கக்கூடிய நிலையிற் கட்சிகளும் இல்லை, இத்தகைய வேட்பாளர்களும் இல்லை என்றொரு கருத்து உண்டு. எனவே, இன்னுமொரு தேர்தலை மிகவிரைவாகச் சந்திக்கக் கட்சிகள் தயாராக இருக்கமாட்டா என அவர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் சிறிய கட்சிகளுக்கும் வேண்டுமானால்-மாநிலக் கட்சிகளுக்கும் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால், பெரிய தேசியக் கட்சிகளுக்கு இது பெரிதாகப் பொருந்தாது என்ற அபிப்பிராயமும் பலரிடம் உண்டு. இத்தகைய அபிப்பிராயம் கொண்டவர்கள் - பெரிய தேசியக்கட்சிகளான காங்கிரஸ்கட்சியும் - பா. ஜ. கட்சியும் மீண்டுமொரு பொதுத்தேர்தலை விரும்புகின்றன என கூறுகின்றனர். அறுதிப் பெரும்பான்மைப் பலத்துடன் தங்களைத் தெரிவு செய்தால் தாம் ஒரு சிறந்த ஆட்சியை மக்களுக்குத் தரப்போவதாகப் பா. ஜ. கட்சி அடித்துக் கூறி மக்களைத் தன் பக்கம் திரட்டமுயல்கின்றது. ஒரு நிலையான ஆட்சியைத் தனது கட்சியால் மட்டுமே தரமுடியும் என தற்போதைய நிலைமைகளை விளங்கப்படுத்திக், காங்கிரஸ்கட்சி பிரச்சாரம் செய்ய முயற்சிக்கும். எனவே, குறுகிய காலத்தில் அடுத்த பொதுத்தேர்தலைச் சந்திக்க பா. ஜ. கட்சியும், காங்கிரஸ்கட்சியும் விரும்பக் கூடும் என அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

நடந்துமுடிந்த பொதுத்தேர்தலில் மாநிலக் கட்சிகளின் கை மேலோங்கி இருந்த இந்த புதிய அரசியல்யதார்த்தத்தைத் தத்தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி புதிய புதிய தேர்தற்கூட்டுகளை அமைத்துக்கொண்டால், ஆட்சியைத் தாமே கைப்பற்ற முடியும் என்று இரண்டு பெரிய தேசியக் கட்சிகளும் நம்பிச் செயலாற்ற இடமுண்டு. எனவே, மீண்டுமொரு பொதுதேர்தலை நடாத்துவதில் முக்கிய இரண்டு கட்சிகளும் விரும்பக்கூடும் என இவர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, மூன்றாவது கருத்தும் ஒன்று உள்ளது. அதாவது, ஒரு கூட்டு ஆட்சி ஒன்று மத்தியில் பதவி ஏற்றுள்ளது. இந்தக் கூட்டுமுன்னணி அரசுக்குக், காங்கிரஸ் ஆதரவளிப்பது என்பது, நீண்டநாட்களுக்குச் சாத்தியமற்றது என அவர்கள் வாதாடுகின்றனர். ஏனெனில், இந்தக் கூட்டுமுன்னணியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும், மாநிலக்கட்சிகள் உட்பட, கடந்த தேர்தலின்போது - காங்கிரஸ்கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தே நாடாளுமன்ற ஆசனங்களையும் - மாநில ஆட்சிகளையும் பிடித்திருந்தன.

இந்தநிலையில், மத்தியில் சிநேகபூர்வ உறவு என்ற புதிய நிலைப்பாட்டையும், மாநிலங்கள் வாரியாகப் பகைமை அரசியல் என்ற யதார்த்தத்தையும், காங்கிரஸ் கட்சி, எத்தனை நாட்களுக்கு நடாத்திப் பார்க்கும்? இந்த இரட்டைநிலை, அடுத்த தேர்தலில் தமது வெற்றி வாய்ப்புகளைப் பாழாக்கிவிடும் என்று காங்கிரசின் மூத்த தலைவர்கள், நிச்சயம், அஞ்சுவார். இவை காரணமாகத் தேவகௌடாவின் அரசுக்குக், காங்கிரஸ் கட்சி வழங்கும் ஆதரவின் ஆயுள் சொற்பமானது என்று இந்த தரப்பினர் வாதிடுகின்றனர்.




## இலங்கை அரசாங்கத்தின்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

15000 - 30000 ரூபாவிற்கு இடைப்பட்ட மாத வருமானம் பெறுவோர் 2 ./. தினையும் 30000 ரூபாவிற்கு மேற்பட்டு வருமானம் பெறுவோர் 3 ./. தினையும் தமது வருமானத்திலிருந்து செலுத்த வேண்டும். எனினும், பாதுகாப்புப் படையினர் இதனைச் செலுத்தத் தேவையில்லை. இவற்றைவிட வெண்தாமரை இயக்கம் என்ற பெயரிலும் போருக்கான நிதியை அரசாங்கம் திரட்டிக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவு காரணமாகச் சமூகப்பணி, பொருளாதாரப் பணிகளுக்கு அதிகளவு நிதியினை ஒதுக்க முடியாமல் திணறுகின்றது. கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய மூன்றுக்கும் செலவிட்ட மொத்தச் செலவில் 1984 ஆம் ஆண்டு கல்விக்கு 52 ./. மும், சுகாதாரத்திற்கு 36 ./. மும், பாதுகாப்புக்கு 12 ./. மும் செலவிடப்பட்டது. ஆனால் 1995 ல் கல்வியின் பங்கு 28 ./. மாகவும், சுகாதாரத்தின் பங்கு 19 ./. மாகவும், பாதுகாப்பின் பங்கு 53 ./. மாகவும் இருந்தது. எனவே 1980 - 95 காலப்பகுதியில் கல்வி சுகாதாரம் என்பவற்றின் மீதான மொத்தச் செலவின் பங்கு 88 ./. த்திலிருந்து 47 ./. மாக வீழ்ச்சியடைய பாதுகாப்புச் செலவின் பங்கு 12 ./. திலிருந்து 53 ./. மாக அதிகரித்தது. எனவே இன்று அரசாங்கம் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்காகச் செலவிடும் மொத்தத் தொகையிலும் பார்க்கக் கூடுதலான தொகையினைப் பாதுகாப்புக்குச் செலவிடுகின்றது.

## அவலத்தைத் தந்தவருக்கு...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்தாந்தம். அமெரிக்கச் சிவப்பிந்தியர்கள் மீதும், ஆபிரிக்க நீக்ரோக்கள் மீதும் வெள்ளை இன அரசுகள் இதை வெற்றிகரமாச் செய்துள்ளன. இரண்டாம் உலகப் போரின்போது பிரித்தானியாவை வெல்வதற்காக ஜேர்மனிய விமானப் படை, இந்த அவலத்தை பிரித்தானிய நகரங்கள் மீது விதைத்தது. பின்னர் அதே நோக்கத்திற்காக பிரித்தானிய விமானப் படை, ஜேர்மனிய நகரங்கள் மீது அந்த அவலத்தை வட்டியுடன் சேர்த்து விதைத்தது.

ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலின் போதும் இந்த உத்தியைத்தான் சிங்களப் படைகள் கையாண்டன. தென்தமிழீழ மக்களது போராட்ட உறுதியை உடைப்பதற்கு நீண்ட நாட்களாகவே - இதே வகைப் பயங்கரத்தையே சிங்களப் படைகள் அங்கே செய்துவருகின்றன.

ஆனால், புலிகள் இயக்கத்திடம் இந்த ஆக்கிரமிப்புச் சித்தாந்தம் எடுபடுவதில்லை.

அவலத்தை - அபாயத்தைக் கண்டு பதறி அவநம்பிக்கை அடைவதைவிட, அதற்கு எதிராக ஆவேசங்கொண்டு, அவற்றை எமது மக்கள் மீது ஏவிவிட்டோரே அவற்றை அனுபவிக்கும்படி செய்வதுதான், ஈழத் தமிழினத்திற்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள புதிய சித்தாந்தம் ஆகும். O

தேவ கௌடாவின் அரசைக் காங்கிரஸ் கட்சி பாதுகாப்பதால், ஈழத்தமிழரின் இனப்பிரச்சனை விவகாரம் தொடர்பாகப் புதிய, அதாவது, ஈழத்தமிழருக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுக்க அது விரும்பாது என்பது வெளிப்படை.

ஆயினும், தமிழ்நாட்டு அரசின் விருப்பத்திற்கு மாறாக மத்திய அரசு நடந்துகொள்ள விரும்பாத சூழலும் உண்டு. கலைஞர் கருணாநிதியின் தமிழ்நாட்டு அரசு, ஈழத் தமிழர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் என்ற எதிர்பார்ப்பே ஈழத்தமிழரிடம் உண்டு. மத்தியில் எந்தக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றினாலும், தமிழ்நாடு மாநிலத்தில், ஈழத்தமிழருக்கு ஆதரவான ஒரு அரசு இருக்குமானால் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இருந்து மத்திய அரசு பின்வாங்கக் கூடும். O

# "நல்லதோர் வீணை செய்தே..."

"எப்படிப் பட்டவர்கள் எம் மக்கள்?" மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியே எப்பொழுதும் மேலெழுகின்றது. "சூரியப் பிரகாசம் — 1" இன் போது, கட்டிய துணியோடு கைதடி தாண்டுகையில் கேட்கப்பட்ட கேள்வி இது. இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் விழி பிதுங்கி, வாய் மூடி, மௌனித்துப் போனது சிங்கள அரசு. இப்பொழுதும் அதே கேள்வி மேலெழுகின்றது. ஆனால், இப்பொழுது வேறுபாடு என்னவெனில், சிங்களம் உரக்கக் கத்துகின்றது; வானுக்கும் மண்ணுக்கும் துள்ளிக் குதிக்கின்றது; யாழ்ப்பாணம் திரும்பிய மக்களைத், தனது நாளேடுகளின் தலைப்புச் செய்திகளை உருவாக்கும் மாந்தராக்குகின்றது; வண்ண வண்ண ஒளிப் படங்களின் நாயக, நாயகிகளாக்குகின்றது; எம்மக்கள் அங்கு என்ன செய்தாலும், அவர்கள் தோசை சுட்டு விற்றாலும், ஆட்டு மந்தை மேய்த்தாலும் அதனையே அதிசயச் செய்தியாக்குகின்றது. யாழ்ப்

## எம் மக்கள் கையாண்ட உத்தியின் இன்றைய பெறுபேறுதான் என்ன?

பாணம் திரும்பும் மக்களை, "வாழும் போது இறந்தோர் திரும்புகின்றனர்" என்றும், செத்த நகராகப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாண மண் சிங்களப் படையின் சீரிய பாதம்பட்டு அகலிகை உயர்த்தாற்போல் உயிர்க்கின்றது என்றும் வர்ணிக்கின்றது; யாழ்ப்பாண நகரைக் கட்டியெழுப்பி யாழ் மக்களை மீண்டும் கல்விக் கட லுக்குள்ளும், வேளாண்மைத் தொழிலுக்குள்ளும் முற்றிலுமாக மூழ்கடிக்கப் போவதாகவும் பெருமையடித்துக் கொள்கின்றது. எவ்வளவு பரிவு... எவ்வளவு அன்பு .. எவ்வளவு கரிசனை

எனவே, இப்படிப்பட்டவர்தான் தமிழ்மக்கள் என்கிறது சிங்களம். கிடுகு வேலிக்குள் அதுவே உலகமென்றும், தானுண்டு, தனது குடும்பம், தோட்டம், அரசாங்கத் தொழிலுண்டு என்றும், அடக்க ஒடுக்கமாக வாழ்ந்த மக்களிடையே, புலிகள் போன்ற பயங்கரவாதிகள் தோன்றியது ஒரு தற்செயல் விபத்து. இப்போது, எல்லாமே சரியாகி விட்டது. இம்மக்கள் இரண்டொரு வார இலவச உணவுப்பங்கீட்டினைப் பெறுவதையும், இ போ.ச. நவீன வண்டியில் இருந்து போவதையும், சதோச சலுசலாவில் சகாய விலையிற் பொருட்கள் வாங்குவதையும், இடைக்கிடைவந்து, இல்லாமலே போகும் மின்னொளியைக் காண்பதையுமே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகக் கருதும் எளிமையான மக்கள். அதனால்தான், "அவர்கள் புலிகளைக் கைவிட்டு எம்பக்கம் வந்துவிட்டனர்" என்கின்றது சிங்களம்.

"இல்லை இல்லை; இதுவல்ல உண்மை; யாழ்ப்பாணத்தார் அப்படியானவர் அல்லர். தமது உழைப்பால் தேடிய தோட்டங்களில், வீடு வாசல்களில், நிம்மதியாக, வசதியாகத் தனிமையாக வாழவிரும்பும் மத்தியதர வகுப்பு மனநிலை கொண்டவர்கள். எனவே தான் அவர்கள் வலிகாமம் திரும்பினர்." என்கிறார், த. வி. கூட்டணிக்குத் தள்ளாத வயதிலும் தலைமை தாங்கும் சிவசிதம்பரம். "புலிகளை வெறுத்தும்தான், மறுத்தும்தான்- மக்கள் வலிகாமம் வந்தார்களா?" என்ற சிங்களத்துச் செய்தியாளரின் கேள்விக்குச் சிவசிதம்பரம் மட்டுமல்ல, புலிகளை எதிர்க்கும் தமிழ்க்குழுக்கள் கூட பதில் சொல்ல மறுத்து விட்டனர். அது உண்மையல்ல என்பது மட்டுமன்றி; "ஆம்" எனத் தாம் அளிக்கும் பதில், தம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு பேரம் பேசும் ஆற்றலையும் இழக்க வைத்து விடும் என்கிற பயமும் இவர்கட்கு மிகுதியாக உண்டு. அதனால் தான் புலிகளை அழிக்க விரும்புவோர் கூட, தாம் அரசியல் அநாதைகள் ஆகிவிடாமல் தமது அரசியல் வாழ்வைத் தக்க வைக்கப் புலிகளையே நம்பியிருக்கிறார்கள். இது ஒருவிசித்திர நகை முறண் என்பது வேறு விடயம் தான். எனவே, மீண்டும் அக்கேள்வி எழுகின்றது. "இப்படிப் பட்டவர்களா எம் மக்கள்"

அல்லது, ஆய்வாளர், அறிஞர், அறிவுஜீவிகள் எனத் தம்மை, தாமே அழைப்போர் கூறிக்கொள்வது போல நிலவுடமைச் சமூகத்தின் அடிப்படைகளை இன்னமும் கொண்ட, சாதியடிப்படையிலான ஒரு சமூக அதிகாரப் படி நிலை முறைமையைப் பின் பற்றுகிற, அதன் மூலம் தனது சமூக அதிகாரப் பேணலைக் காப்பாற்ற விரும்புகின்ற, அதற்காக ஆளும் அதிகாரமுடையோரோடு அவர் எவராயினும் சரி இணக்கமாகச் செல்லும் இயல்பு உடையவர்களா எம் மக்கள்? நாவலரிலிருந்து, மெத்தப் படித்த பொன்னம்பலம் இராமநாதன் வரை, அன்றும் சரி இன்றும் சரி - பாரம்பரியத்

## வலிகாமத்திலிருந்து ஏன் வந்தார்கள்? பின்பு ஏன் திரும்பிப் போனார்கள்?

தைப் பேணுவதை முதன் நிலைப் படுத்தியதை இதற்கு இவர்கள் சான்றாகுகின்றனர். இன்னும் சில வரலாற்றாளரோ, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆகியோர், தம் காலத்தில் எம் மக்கள் பற்றிய தமது மனப் பதிவுகளை எவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதை விளக்குகின்றனர் "இந்த நாட்டின் நல்லாட்சிக்குத் தமிழரின் மூளைத் திறன், அவர்களின் சுறுசுறுப்பான உழைப்பு என்பன கடந்த காலங்களில் மிக்க பயனுள்ளதாக அமைந்தன. அதே போலவே, எதிர் காலத்திலும், விலை மதிக்க முடியாத பங்கை இவர்கள் ஆற்றுவர். நாட்டின் நல்லாட்சிக்கு பிரித்தானியர் எப்போதுமே தமிழரின் உதவியை நாடிநிற்பார் என, 1930 களில் ஆங்கிலேய ஆள்பதி ஒருவர் கூறியதைப் பொதுமைப்படுத்தி எம்மக்கள் இத்தகையவர்கள் என எண்ண இடமிருக்கின்றது என்கின்றனர். எனவே, எம்மக்களின் சொந்தமுகம்- உண்மைமுகம் எது? அந்நியர் எவராலும் அடி முடி அறியப்படாத எப்படிப் பட்டவர்கள் எம் மக்கள் என்கிற கேள்விக்கு விடை காணவே முடியாதா?

வலிகாமத்திலிருந்து ஏன் வந்தார்கள்? பின்பு ஏன் திரும்பிப் போனார்கள்?

இக் கேள்விகளுக்கான மிகச் சரியான விடையை அண்மிப்பதற்கு, நாம் பல நூற்றாண்டு கால வரலாற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான், அந்நியர் ஆதிக்கம் என்கிற பாரிய வரலாற்று நெருக்கடிகள் எதிர்ப்பட்ட போதெல்லாம், அதற்கு முகம் கொடுக்க எத்தகைய உத்திகளை எம்மக்கள் பயன்படுத்தினார். என்பதை நாம் அறிய முடியும்; வெளிக்காட்டப்பட முடியாத அவமானச் சின்னமாகத்-தாழ்வுச் சிக்கல்வடுவாக - தன்மானத்திற்கேற்பட்ட தழும்பாக எம் மக்களின் ஆழ்மனதிலே பதிந்து விட்ட அடிமை வாழ்வு மறுப்பின் வெளிப்பாடு, எதிர்ச் செயற்பாடு எது? என்பதை உணர முடியும்.

எத்தனை கொடியேற்ற இறக்கங்களைக் கண்டவர்கள் எம் மக்கள் ஒவ்வொரு ஏற்ற இறக்கங்களின் போதும் பல்வேறு உத்திகளுடான பாரம்பரியப் பேணலாக - வெளியார் ஆதிக்கத்திற்கு எதிரான முனைப்பான செயற்பாடாக இணங்கிப் போவது போல அந்நியனோடு உறவாடிப் பின்னர் தம்சொந்த வழியிற் செல்லும் தந்திரோபாயமாக எத்தனையோ வழிகளைக் கையாண்டு, தமதுசுகத்தைச் சொந்த முகத்தைத் தேசியத்தின் ஆன்மாவை வேறெவரிடத்திலும் பறிகொடுக்காமல் காப்பாற்றி வருபவர் எம் மக்கள். 1621 இல் போர்த்துக்கேயரிடமும், 1658 இல் டச்சுக்காரரிடமும், 1796 இல் ஆங்கிலேயரிடமும் அடிமைப்பட்டதற்கும், 1948 இல் நாதியற்றுப்போனதற்கும், 1956, 58, 77, 81, 83 இல் அடியுதை பட்டதற்கும், பலம்மிக்க தேச விடுதலைப் படையணி இன்மையே பிரதான காரணம்

## எங்கெல்லாம் எம் மக்களோ இன்று அங்கெல்லாம் புலிகளும்!

என்பதை உணர்ந்தவர்கள் எம் மக்கள். இதன் வெளிப்பாடாகவே விடுதலை உணர்வென்னும் அகல் விளக்கை அணையவிடாமல் நெஞ்சக்கூட்டுக்குள் வைத்துக் காப்பாற்றியதாலேயே, 1970 களில் தமிழர் விடுதலைப் போராட்ட அணியாக முகிழ்ந்த புலிகள் இயக்கம் வளர்ச்சியடைந்த புது வரலாறு, பர்ணமித்தது. இந்தப் புது வரலாற்றின் அடிவரலாறு சங்கிலியனில், பூதத் தம்பியில், பண்டார வன்னியனில், இன்னும் பெயர் தெரியாது, !முகமறியாது, விடுதலைக்காக கழுவிலேற்றப்பட்ட மண்ணின் மைந்தரில் உள்ளது என்பதே உண்மை. இது முன்னைய கதை; அண்மைய கதை எவ்வாறுள்ளது ?

வே. பாலகுமாரன்

1990 ஆம் ஆண்டின் போர் தொடங்கிய பின்னாலான நாட்களில், போரோசையைத் தவிர வேறோசை கேட்காத நேரங்களில், சிதறும் தசைத் துண்டங்கள், பாய்ந்திடும் பச்சைக் குருதி என எங்கும் காரிருள் சூழ்ந்த வேளையில் எவ்வாறு இருந்தனர் எம் மக்கள் ? என்றுமில்லாதவாறு தம் முன்னே தோன்றிய போர்ச் சூழலை மிக, மோசமான பொருண்மியத் தடையை எவ்விதம் தாண்டினர் எம் மக்கள் ? அசைக்க முடியாத மனவுறுதியின் வெளிப்பாடாக, உள்ளார்ந்த ஆற்றலின் எல்லையை, தமது தாங்கு சக்தியின் உச்சத்தை அப்போது அடைந்தனர் தமிழ் மக்கள். இப்படிப் பட்ட மக்களை எவரால் என்ன செய்யமுடியும்? தாமும் வாழ்ந்து, தமது போராளிகளையும், தாயகத்தையும் வாழவைத்த மாண்புடையவர்களே எம் மக்கள் !

எனவேதான், பாரிய படையெடுப்பு எதிர்வந்தபோதும், அது சரி வராதபோது பின்பு கதையை மாற்றி எதிரி வஞ்சக உறவாடிய போதும், அந்தந்தச் சூழலுக்கேற்ப தமது பட்டறிவு சொன்ன பாதைக்கேற்ப நடந்தனர் எம் மக்கள். எம்மக்கள் கையாண்ட உத்தியின் பெறுபேறுதான் என்ன? வலிகாமத்தில், வடமராட்சியில், தென்மராட்சியில், தென் தமிழீழத்தின் எல்லைப் பரப்போடும் வன்னிப் பெருநிலத்திலும் – எங்கும் - எம் மக்கள் கால் பதித்துப் பரவி நிற்கின்றனர். எங்கெல்லாம் எம் மக்களோ அங்கெல்லாம் புலிகளும் ! இப்போது வட தமிழீழத்தின் ஆகக்கூடிய குடிதொகை கொண்ட நிலப்பரப்பாக வன்னிப் பெருநிலம் பெருமிதம் அடைகின்றது. தமிழீழத்திற்குள் புதிய குடித்தொகைப் பரம்பலிது.

எனவே, உறுதிமிக்க தேசிய விடுதலைப் படையணியாகப் புலிகள் பூரணமாக உருவெடுக்கும்வரை, இடம்பெயர்ந்தும் இடம்சேர்ந்தும் எம்மக்கள் வகுக்கும் உத்திகளைச் சிங்களம் எவ்வாறு புரியும்? ஆழமான, நுட்பமான மனப்பாங்குள்ள எம் மக்களைத் தவறாகக் கணிப்பதன் விளைவு தவிர்க்கமுடியாத பெருஞ் சங்கடத்துட் சிங்களம் சிக்குகின்றமையேயாகும்.

பாரதி பாடியதுபோல "நல்லதோர் வீணைசெய்தே அதை நலம் கெடப் புழுதியில்" எறிபவரல்லர் எம்மக்கள்; "சுடர்மிகு அறிவுடன்" உள்ள அவர்கள், "நிலச் சுமையென ஒருபோதும் வாழ்ந்திடார்" என்பதை இந்த உலகம் மிக விரைவில் அறியும் ! ○

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்